# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,845 — 1969 මාර්තු 14 වැනි සිකුරාදා — 1969.3.14

14,845 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு மாச்சு மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 261 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 277 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 279 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 286 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


### பதவிகள்—வெற்றிடம்

**"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"**

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

(iii)(அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. **யுத்தச்சேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No.—A. 89/X. 2029/68

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மகா வித்தியாலயங்களிலுள்ள விசேட பதவிகள் I ம் தரம்

அரசினர் சிங்கள/தமிழ், முஸ்லிம் மகா வித்தியாலயங்களிலுள்ள I ம் தர விசேட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் கீழ்க்காணும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் 28.3.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 3.4.1969.

மு. கு.—1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ந் திகதிய 14,831 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிலும் 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் வெளியான இப்பதவிகள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கமைய விண்ணப்பித்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

(i) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பி வைக்கலாம்.

(ii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

குறிப்புகள்.—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்பட்டதுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் 15 ம் கூட்டில் விண்ணப்பம் சிங்கள/தமிழ் அல்லது முஸ்லிம் மகா வித்தியாலயத்திலுள்ள விசேட பதவிக்கானதென புதிய முறையில் காட்டப்படல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். இப்பதவிக்கு நியமிக்கப்படும் ஒருவர், தெரிவு செய்யப்படுமுன், உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பளத்துக்கு உரித்துடைய ஆசிரிய பதவியை வகித்தவராயின் அவர் வகிக்கும் வரை இப்பதவி உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவையாக பிரகடனம் செய்யப்படும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர்கள், புதிய பதவியில் ஒரு வருடகாலத்துக்குப் பதில் கடமை புரிய வேண்டும். உறுதிப்படுத்தப்பட்டதும் இத்தரத்துக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட திகதியிலிருந்து நிதிப்பிரமாணங்களுக்கு அமைய உரிய சம்பள விகிதத்தில் வைக்கப்படுவார்கள்.

(iii) தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டு வருதற்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்கு, ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) விண்ணப்பதாரிகள் உடல்நலமுடையவராயும் சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் இருக்க வேண்டும்.

3. சம்பளமும் சகாயப்படிகளும்

இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு.—ரூபா 5,160—360—ரூ. 8,400 வருடாந்தம்.

4. தகைமைகள்

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.—

(i) விண்ணப்பதாரிகள், விண்ணப்ப முடிவுத்திகதி (29-3-69) அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) ஆசிரியராக குறைந்த பட்சம் 5 வருட சேவைபுரிந்த பயிற்றப்பட்ட பட்டதாரியாக அல்லது சமமான தகைமை பெற்றவராக இருக்க வேண்டும்.

(iii) பட்டம் பெற்ற பின் குறைந்த பட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக (1 ம் அல்லது 2 ம் வகுப்பு) சிறப்பு பட்டதாரியாக அல்லது சமமான தகைமைபெற்றவராக இருக்க வேண்டும்.

(iv) பட்டம் பெற்ற பின் 7 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாகவேனும், சமமான தகைமையுடன் 7 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றவராகவேனும் இருக்க வேண்டும்.

(v) குறைந்த பட்சம் 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரியாகவேனும் சமமான தகைமைகளுடன் 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றவராகவேனும் இருக்க வேண்டும்.

(vi) II ந் தர விசேட பதவி வகிப்பவராகக் குறைந்த பட்சம் 5 வருட சேவை புரிந்த II ந் தர விசேட பதவி வகிப்பவராக இருக்க வேண்டும்.

குறிப்பு 1.—விண்ணப்பதாரிகள் சிறந்த சிங்கள/தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் ஏற்கனவே சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருந்தாலன்றி, நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க. பொ. த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி யெய்தவேண்டும். சிங்களத்தில்/தமிழில் வேண்டிய தகைமையைப் பெறுதற்கு 3 வருடத்துக்குக் கூடுதலாக எடுக்கும் காலத்தில் சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும்.

குறிப்பு 2.—பயிற்றப்பட்ட பட்டதாரியாக/பட்டதாரியாக/உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராக/சிங்கள அல்லது தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் புரிந்த சேவைக் காலத்தைக் கணிக்கும்பொழுது படிப்பு லீவு அல்லது சம்பளமற்ற லீவுக் காலவும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 3.—தெரிவு செய்யப்படுபவர்கள், சாதாரணமாக, மகா வித்தியாலயங்களுக்கு பிரதி அதிபர்களாக அல்லது பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள். விசேட பதவி வகிப்பவர்கள், பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுமிடத்து, பொதுவாக பின்வரும் பாடத்துறைகளில் நடைபெறும் வேலைகளையும் கவனிக்க வேண்டும் :—

(i) மொழியும் சமயப் படிப்புகளும்.

(ii) சமூக விஞ்ஞானம் (சரித்திரம், புவியியல், ஆட்சியியல். பொருளியல், குடியியல் முதலியன).

(iii) கணிதமும் விஞ்ஞானமும்.

(iv) தொழில்நுட்ப, வர்த்தக, இரசஞ்ஞான படிப்புகள்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனுஞ் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (மு .கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) உயர்தொழில் தகைமைத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரங்கள்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தனுப்பல் ஆகாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை, தொடர்பான திணைக்களத் தலைவர்களுக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதி கார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண் டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிடப்பட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்த மானியின் I ஆம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப் பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக் கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகிய அபேட்சகர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலை பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாள ருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பங்களை கவனிக்கு மாறு கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 7.3.1969.

3-594/1—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

No.—AA. 34/X. 2066/68

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### பிரதி மாஸ்டர் அற்றென்டன் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் பிரதி மாஸ்டர் அற்றென்டண் பதவிக்கென இலங்கையர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலு வலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற விலாசத்தில் கீழ்க் காணும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் வந்து சேரும் படியாக அவை அனுப்பப்படுதல் வேண்டும் :—

உள்ளூர் விண்ணப்பங்கள் : 28. 3. 69.

வெளியூர் விண்ணப்பங்கள் : 3. 4. 69.

குறிப்பு. (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்ப வர், தமது முகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டப் படாத 9"×4" அளவுக்குக் குறையாத கடித உறை யையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் ஒரு உத்தி யோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர் பான ஒரு கடிதம், அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. கடைசி நாள்வரை தங்கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்சகர் கள், அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப் பார்கள்.

2. நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.

பதவி நிரந்தரமானது, அத்துடன் இளைப்பாறு சம்பள முடையது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் விதவைகள் அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு உதவு பணம் செலுத் துதல் வேண்டும். நியமனம் பெறுபவர் முதலில் 2 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் இருப்பார்.

3. சம்பளமும், படிகளும்.

இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

வருடமொன்றுக்கு ரூபா 13,800—600—15,600

4. தேவையான தகைமைகள்.

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடைய வர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண் டும் :—

(அ) சிறந்த பண்பும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 28. 3. 69 ஆந் திகதியன்று வயது 35 க்குக் குறையா மலும் 45 க்கு அதிகமில்லாமலும் இருத்தல் வேண் டும். (மேல் வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவை யிலுள்ள உத்தியோகத்தர்கள் விடயத்தில் பொருந் தாது.)

(இ) (1) இங்கிலாந்திலுள்ள தொழிற் சபையினால் (Board of Trade) வழங்கப்பட்ட கடலோடித் தலைவ ருக்கான (Master Mariner's) தகுதிகாண் சான்றிதழை உடையவராக இருத்தல் வேண் டும்.

(2) கடல் அளவையில் நல்ல செய்முறை அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

(3) வர்த்தக அல்லது கடற்படைத் துறைமுக நிர் வாகத்தில், பொறுப்புள்ள பதவியினராய் 8 வருடங்களுக்குக் குறையாமல் இருந்து பெற்ற அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(4) கலங்கரை விளக்க சாதனத்திலும், வேலையிலும் செய்முறை அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

(5) நல்ல கண்பார்வையும், காதால் நன்றாகக் கேட் கும் சக்தியும் உடையவராக இருத்தல் வேண் டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு: ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவை யின் நோக்கத்துக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.)

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கல்வித் தாராதரப் பத்திரம்.

(இ) பண்புபற்றிய இரு சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

குறிப்பு : (i) இவ்விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவ்விதஞ் செய்யாமலிருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத்திகதியன்று, அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி நேராக அனுப்புதல் வேண்டும். இத்தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட ("ஆ" எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் முகவரிக்கே அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி, II ஆம் தொகுதி ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப்பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட ("அ" எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் கூறப்பட்டிருப்பதுபோல அவர்கள் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால் இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தது பற்றி அவர்கள் அறிவிக்கப்படுவார்கள். இத்தேவையின் பிரகாரம் நடந்துகொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்துகொண்டவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடையாமலிருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவர்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 7.3.1969.

3-594/2—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

வெ. மு./5/119.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**"யூனிசெவ்" நிலையத்தால் வழங்கப்படும் மனையியல் புலமைப் பரிசில்கள்**

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக 31.1.69 ஆம் திகதிய 14,839 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தலின் 3 ஆம் பந்தி பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது :—

3. **தகைமை.**—விண்ணப்பதாரிகள் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.7.69 அன்று 30 வயதுக்கு மேற்படாதவராய் இருக்க வேண்டும்.

(iii) கீழ்க்காணும் வகுதிகள் எதிலேனும் ஒன்றில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் மனையியல், தையல் வேலை, கணிதம் அல்லது எண்கணிதம், ஆங்கிலம் ("அ" அல்லது "ஆ" பாடத்திட்டத்தில்), சிங்களம் அல்லது தமிழ் ("அ" அல்லது "ஆ" பாடத்திட்டத்தில்) ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பதற்கமைய இரசாயனவியல் உட்பட 4 பாடங்களில் இலங்கை க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) இலங்கை சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி மனையியல், தையல் வேலை, கணிதம் அல்லது எண்கணிதம், ஆங்கிலம் ("அ" அல்லது "ஆ" பாடத்திட்டத்தில்) ஆகிய பாடங்களில் சித்தி உட்பட க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இரசாயனத்தில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

(iv) சிங்களத்தில் அல்லது தமிழில் கற்பிக்கக்கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

2. 31.1.69 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இப்புலமைப் பரிசில்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 7 ந் திகதி.

3–589—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : நீர்க்குழாய்த் தொழிலாளர், 2ம் வகுப்பு**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்திலுள்ள நீர்க் குழாய் தொழிலாளர் 2 ம் வகுப்பு பதவிக்கு, கீழ்க்காணும் தகைமை களைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங் கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக் காரியதரிசி, கல்வி, கலாச்சார அலுவல் கள் அமைச்சு (பொது நிருவாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.:—

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி இளைப்பாற்றுச் சம் பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ந் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும். நியம தாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்ட தும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப் படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின்—

(அ) தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(ஆ) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறை யில் கொண்டுவருதற்கு குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடு களைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப் படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத் துக்கு அவர் பதில் கடமை புரிய வேண்டும்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) நியமதாரி அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிதி விதிகள், நடைமுறைக் கைந்நூல் விதிகள், அரசினரால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் கட்டளைகள், விதிகள் ஆகியவற்றுக்கு அமைய ஒழுக வேண்டும்.

(vi) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின் வருமாறு :—

(அ) கொழும்பில் அல்லது எந்திரவியல், கைத்தொழில் வேலைக் களமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் சேவை புரிபவர்களுக்கு—முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 2.30 வீதமும் பின்னர் ரூ. 750—42—1,296/– வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல், கைத்தொழில் வேலைக்களமாகத் திறைசேரி யால் அங்கீகரிக்கப்படாததும் வெளியூர்களிலுள்ளதுமான ஒரு நிலையத்தில் சேவை புரியவர்களுக்கு—முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 2.10 வீதமும் பின்னர் ரூ. 750—42—1,086/– வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்**—

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் அல்லது இவ்வமைச்சின் கீழுள்ள யாதேனும் ஒரு பகுதியில் வேலையாளராக இருக்க வேண்டும்.

(ஆ) 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாத வராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவை யில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(இ) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஈ) (i) வாசிக்க எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) 1/32″ வரையறையுள்ள அளவுத் திட்டங்களை விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iii) இத்தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகளின் பெயர் கள், அவற்றின் உபயோகம், அவற்றை நன்னிலையில் பேணிவைத்தல் ஆகியவை பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(iv) அவருக்கு கொடுபடக்கூடிய கடமைகள் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(v) சுலபமான வரைதல்களை விளங்கிக் கொள்ளக்கூடிய வராய் இருக்க வேண்டும்.

(உ) மேற்போந்த (அ) ம், (ஆ) ம், (இ) ம், (ஈ) ம் தேவைகளுடன் கீழ்க்காணும் தகைமைகளையும் கொடுபட்டுள்ள முதன்மை ஒழுங்கின் பிரகாரம், பெற்றிருக்க வேண்டும்:—

(i) III ம், IV ம் வகுப்புத் தொழிலாளர் தரங்களில் குறைந்த பட்சம் 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; இதில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் III ம் வகுப்பில் புரிந்த சேவையாக இருக்க வேண்டும் ; **அல்லது**

(ii) IV ம் வகுப்பில் புரிந்த சேவையுடன் II ம் வகுப்பில் புரிந்த சேவை 3 வருடங்களுக்குக் குறைவாயிருப்பின் III ம், IV ம் வகுப்புகளில் மொத்தம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; இதைக் கணிக்கும் விடயத்தில் IV ம் வகுப்பில் புரிந்த 2 வருட சேவை III ம் வகுப்பில் புரிந்த 1 வருட சேவைக்குச் சமமாகக் கருதப்படலாம் ; **அல்லது**

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் II ம் வகுப்புத் தொழில் பயில்வோராகக் குறைந்தபட்சம் 3 வருட சேவை புரிந்திருப்பதுடன் அல்லது (ஆ) III ம் வகுப்புத் தொழில் பயில்வோராகக் குறைந்தபட்சம் 6 வருட சேவை புரிந்திருப்பதுடன் III ம் வகுப்பில் குறைந்தபட்சம் 2 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்; **அல்லது**

(iv) IV ம் வகுப்பில் 8 வருட சேவை புரிந்திருக்க வேண டும் ; **அல்லது**

(v) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் நீர்க்குழாய்த் தொழிலாளராக 5 வருடத்துக்குச் குறையாத முன்னைய சேவையுடன் இப்பகுதியில் III ந் அல்லது IV ந் தர வேலையாளராக இருக்க வேண்டும். (மேற்போந்த (i) ம், (ii) ம், (iii) ம், (iv) ம் வகுதிகளில் அடங்கும் வேலையாளர்கள் இல்லாத விடத்து இவ்வகுதியில் அடங்கும் வேலையாளர்களின் விண்ணப்பங்கள் அமைச் சின் அனுமதியுடன் சீர்தூக்கப்படும்.) மேலும், முன் னைய சேவையை நிரூபித்தற்கு அத்தாட்சிப் பத்திரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

**குறிப்பு.**—ஐக்கிய இராச்சிய யுத்த சேவையில் தொழில் பயில்வோராகப் புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவை யாக ஏற்றுக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங் களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம் ;

(ஆ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகை மைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும் ;

(இ) மேற்போந்த 4 (உ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீ கரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட் சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள் ;

(ஈ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

**குறிப்பு.**— (i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவை யில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறு வோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் இத்தகைய விண்ணப் பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாய மான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதி/ நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள், கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின்

நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

தொடர்பு எண். : ஜீ. ஏ. 5/137,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1968 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**2 ம் வகுப்பு, நீர்க்குழாய்த் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக)
2. நிரந்தர விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————. பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா ?
7. கல்வித் தகைமைகள்—
(i) பொது : ————.
(ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் : ————.
(iii) சிங்களத்தில் தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகயவை குறிப்பிடப்பட வேண்டும்) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா : ————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.
12. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
13. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம்
(i) வகித்த பதவி : ————.
(ii) சேர்ந்த விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.
15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.————.
16. தற்போதைய உத்தியோகம் :————. நிலையம் : ————.
(i) பதவிப் பெயரும் தரமும் : ————.
(ii) நியமனத் திகதி : ————.
(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? : ————.
(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப் படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.
17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

## பகுதி நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்

எனது எண் :
உங்கள் எண். : ஜீ. ஏ. 5/137

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்/பின் இவ் வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

..........இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை.*

பகுதி நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.
*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

3–552—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்கள்

### பொது எழுதுவினைஞர் சேவை எழுதுவினைஞர் பதவிகள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள எழுதுவினைஞர் பதவிகளுக்கு பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆம் தர எழுதுவினைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இதற்குள்ள அட்டவணையிலுள்ளவாறமைந்த படிவத்தில் அமைந்த விண்ணப்பங்கள், திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன், வெளிநாடுகளில் சேவை செய்வதற்கு விண்ணப்பதாரருக்குள்ள தகுதிபற்றியும், அவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் வகிக்கும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படலாம் எனக்கூறும் திணைக்களத் தலைவரது புறக்குறிப்புடனும் அனுப்பப்பட வேண்டும்.

3. ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவை செய்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

4. கணக்கியலில், முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

5. இப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தாம் வெளிநாடுகளில் சேவை செய்வதற்கு ஏற்ற உடனலம் உள்ளவர்களா என்பதனை அறிவதற்கென ஒரு வைத்தியப் பரிசோதனையைச் செய்து கொள்ளும்படி கேட்கப்படுவர். இவர்கள் 6 வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு வெளிநாடுகளில் சேவை செய்யும்படி கேட்கப்படுவர்.

6. இப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தருக்கு அவரவர்க்குரிய அடிப்படைச் சம்பளம் தொடர்ந்து கொடுக்கப்படுவதுடன் இலங்கையில் கொடுக்கப்படும் வாடகை, வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைப்படி என்பவற்றிற்குப் பதிலாக வெளிநாட்டுப் படி ஒன்றும் கொடுக்கப்படும். பிற நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கை கடல்கடந்த சேவைப் பிரமாணக் குறிப்புகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறேயாம்.

7. முன்பு இவ்வமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

8. விண்ணப்பங்கள் 1969 மார்ச்சு 31 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ எனக்குக் கிடைக்க வேண்டும்.

சீ. குணசிங்கம்,
பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின்
நிரந்தரச் செயலாளருக்காக.

பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
செனேற் கட்டிடம், கொழும்பு 1,
1969 மார்ச்சு 1.

அட்டவணை

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்-குடும்பப் பெயர் முதலில் :—
(தெளிவான எழுத்தில்)
2. பிறந்த தேதி :————
3. முகவரி :————
அலுவலகம் :———— சொந்த முகவரி :————
4. தேசிய இனம் :————
5. விவாகமானவரா அல்லவா :————
6. மணமானவராயின் குழந்தைகளின் தொகை :————
7. கல்வித் தகைமைகள் :————
8. தற்போதைய தரமும் இத்தரத்தில் சேர்ந்த திகதியும் :————
9. தற்போதைய ஆண்டுச் சம்பளம் :————
10. தற்போது புரியும் கடமைகளின் தன்மை :————
11. கணக்கியல் வேலைகளில் உள்ள அனுபவம் :————
12. சிங்கள மொழியில் உள்ள தேர்ச்சி :————
13. சிங்கள தட்டெழுத்தில் உள்ள தேர்ச்சி :————
14. பிற தகைமைகள் :————

மேலே கொடுக்கப்பட்ட விடயங்கள் சரியானவை என அத்தாட்சிப் படுத்துகிறேன்.

————————,
திகதி ————, விண்ணப்பதாரரின் கையொப்பம்.

3-387—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,845

---

## அரசாங்க மொழித் திணைக்களம்

### மொழி பெயர்ப்பாளர் பதவி (சிங்களம்)

அரசாங்க மொழித்திணைக்களத்திலுள்ள சிங்கள மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1969, ஏப்பிறில் 4 ஆம் தேதி அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பளம்.**—பதவிக்குரிய ஆண்டுச்சம்பள அளவுத்திட்டம் : ரூபா 3,900—180, 240—ரூபா 6,540 ; ஆண்டுச் சம்பளம் ரூபா 5,340 வருவதற்குமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **நியமன நியதிகள்.**—(i) பதவி நிரந்தரமானது ; உபகாரச் சம்பளத்திற்குரியது. பதவிக்குத் தெரிவு செய்யப்பவர் வி. அ. உ. ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மூல மொழிப்பெயர்ப்புச் செய்தல், பிறபகுதிகள் அனுப்பும் சிங்கள மொழிபெயர்ப்புகளை மீளவாய்தல், வேறு வழிகளில் அரசாங்க மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழி பெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழி பெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத் திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் பின் வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழையும் ஒரு பாடமாகவெடுத்துப் பட்டம் பெற்றவராக விருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பத்து ஆண்டு அனுபவம் பெற்ற சிங்கள மொழி பெயர்ப்பாளராகவோ, சிங்கள எழுத்தாளர் அல்லது நூலாசிரியராகவோ விருப்பதுடன், பட்டதாரிகளுக்குக் குறையாத புலமைத் தகுதி யுடையவராயும் ஆங்கில அறிவு நிறையப் பெற்றவராயுமிருக்கிறாரெனத் தேர்வுக்குழுவினர் திருத்திப்படும்படியாக எடுத்துக் காட்டக் கூடியவராயுமிருத்தல் வேண்டும் ;

(இ) 1969, ஏப்பிறில் 4 ம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாத வராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (இந்த வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குப் பொருந்தா) ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடல் நலமுடையவராயு மிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிகளை (மூல இதழ்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ; அல்லது (பிறப்பு பதியப்படாத விண்ணப்பகாரருக்கு) பதிவாளர் தலைமை அதிபதி வயது பற்றி வழங்கிய சிறப்புச் சான்றிதழ்.
**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காய பிரமாணத்தொகுப் பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) பெற்ற மிக உயர்ந்த கல்வித் தகைமையும் உயர் தொழிற்றகைமையும் மிக உயர்ந்த கல்வித் தகைமை அல்லது உயர் தொழிற்றகைமை பற்றிய சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம், இப்பதவி வகிப்பதற்குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்).
**குறிப்பு.**—சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் படிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. ஒரு விண்ணப்பப் பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணுமற்போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைபாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவராயின் அது அவர்கள் பொறுப்பாகும். அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவ்விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவரிடம் கிடைத்திருப்பதுடன் அத்தலைவர், சுணக்கத்திற்குச் செல்லுபடியான காரணம் காட்டி, அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் ; இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறுத விண்ணப்பகாரர் உடனே அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர் பி. அபேசேகரா,
அரசாங்க மொழி
அலுவல் ஆணையாளர்.

அரசாங்க மொழித்திணைக்களம்,
22, நீட் வழி, த. பெ. இல. 598,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 2 ந உ.

அரசாங்க மொழித் திணைக்களம்

**மொழி பெயர்ப்பாளர் பதவி (சிங்களம்)**

1. முழுப் பெயர் : திரு./திருமதி/செல்வி : ————.
(பெரிய தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் : ————.
(ஆ) பிற பெயர்கள் : ————.

2. அஞ்சல் முகவரி : ————.

3. (அ) 1969, ஏப்பிறில் 4 ம் தேதியன்று சரியான வயது :
ஆண்டு : ————. மாதம் : ————. நாள் : ————.
(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின் படி அல்லது வயது பற்றிய சிறப்புச் சான்றிதழின் படி இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.

4. தேசிய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது என்பதும் :————

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் : ————
(ஆ) அவருடைய பிறந்த தேதியும் இடமும் : ————.
(இ) அவருடைய தேசிய இனம் : ————.

6. விண்ணப்பகாரர் மணமானவரா, மணமாகாதவரா, வாழ்விழந்தவரா என்பது (மணமானவராயின் மணமான தேதியும், பிள்ளைகள் எத்தனையென்பதும்) : ————.

7. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களும், அவற்றிற் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீக்கிய தேதியும் : ————.

8. (அ) கல்வித் தகைமையும் உயர் தொழிற்றகைமையும்/கல்வித் தகைமை அல்லது உயர் தொழிற்றகைமை ; தகைமைகள் பெற்ற தேதியும், வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும். (ஆதாரமாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.
(ஆ) சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் :—
சிங்களம் : ————.
ஆங்கிலம் : ————.

9. பின்வருவனபற்றிய விபரங்கள் :—
(அ) மொழிபெயர்ப்பு வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக : ————.
(ஆ) இலக்கியம் சம்பந்தமான வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக : ————.

10. (அ) பாடசாலை அல்லது கல்லூரியை விட்டபின் செய்த தொழில், தொழிலிற் சேர்ந்த தேதியும் அதனைவிட்ட தேதியும் பெற்ற சம்பளமும் : ————.
(ஆ) அரசாங்க சேவையிலிருப்பின் இப்பொழுதுள்ள நிலையும் ஆண்டுச் சம்பளமும் : ————

11. விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவைபற்றிய விபரங்கள் : ————

12. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான (பொறுப்பானவர்களும் உறவினர் அல்லாதவர்களுமான) நடுவர் மூவரின் பெயர், முகவரி, பதவிப் பெயர் ஆகியன :—
(i) :————.
(ii) :————.
(iii) : ————.

13. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர் ; பதவிப் பெயர் ஆகியன (அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் படிகள், மூல இதழ்கள் அல்ல, இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.

14. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா ? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் : ————.

15. வேறு ஏதாவது விபரம் : ————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிபடுத்துகிறேன். இதிலுள்ள விவரங்களில் ஏதுவாயினும் பொய்யாகவோ பிழையாகவோ விருப்பது கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவுக்குரிய என் தகைமைகளை இழப்பேன் என்பதையும், நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டாடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி : ————,

3—398—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## அரசினர் மின்சார முயற்சிகள் பகுதி

### மூன்றுந்தர மின்சார முகாரிகள் பதவிகள்

உபதொழில் நுட்பச் சேவையின் 3 ந் தர மின்சார முகாரிகள் பதவிகட்கு அரசினர் மின்சார முயற்சிகள் பகுதியினுல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களை 28.3.1969 ந் திகதியிலன்றோ, அதற்கு முன்போ எமக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறைகளின் இடப்பக்க மேற்பகுதியில் "3 ந் தர மின்சார முகாரிகள் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**2. வேதனமும் சேவை நிபந்தனைகளும் :**

இப்பதவிகட்கான சம்பளத்திட்ட விவரம் :

தொடக்க அடிப்படைச்சம்பளம் ரூபா 1,860/-உச்ச அடிப்படைச்சம்பளம் ரூபா 2,580/-வருடாந்த வேதன உயர்ச்சி ரூபா 120/- மூன்று வருடத்தகுதிகாண் காலத்தையுடைய நியமனங்களைக் கொண்ட இப்பதவிகள் நிரந்தரமானவையாகவும், இளைப்பாற்றுச் சம்பளத்தை உடையனவாகவும் இருக்கும்.

பரீட்சார்த்திகள் இத்திணைக்களத்தில் பயிற்சி பெறும்படி கேட்கப்படவும் கூடும்.

**3. தேவையான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் தகைமைகளை உடையவர் என ஆதாரங்களுடன் அத்தாட்சிப்படுத்தக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

(அ) 28.3.69 ல் விண்ணப்பதாரிகள் 30 வயதிற்கு மேற்படாதோராகவும் 18 வய்திற்குக் குறையாதோராகவும் இருத்தல் வேண்டும். (இத்திணைக்களத்தில் உத்தியோகத்திலிருப்போருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு இடையாது).

(ஆ) விண்ணப்பதாரிகள், கட்டுபெத்தை நுண்தொழிற் பயிற்சிக் கழகத்தினுல் நடாத்தப்படும் கனிஷ்ட நுண்தொழில் உத்தியோகத்தர் (மின்சாரம், இயந்திரம் ஆகிய பகுதிகள்) II பயிற்சிகளில் சித்தி எய்தியவர்களாகவோ அல்லது அதே தகைமையுடைய வேறு பயிற்சிகளில் சித்தி எய்தியவர்களாகவோ இருத்தல் வேண்டும்.

4. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். அப்படியான விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் எமக்குக் கிடைக்கத்தவறின் நிராகரிக்கப்படும். ஆயினும், குறிப்பிட்ட திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் குறித்தகாலக் கெடுவுக்கு முன் தமக்குக் கிடைத்தன எனவும், போதிய காரணங்களால் உடனே எமக்கு அனுப்பத்தவறினரெனவும், தகுந்த காரணங்காட்டி,

அவைகளை ஏற்கும்படி சிபாரிசு பண்ணி அனுப்பும் பட்சத்தில் அவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) சித்தியெய்திய ஆகக்கூடிய கல்வித்தகைமைச் சான்றிதழ், ஆகக்கூடிய தொழிற் தகைமைக்கான சான்றிதழ் ஆகியன.

(ஆ) விண்ணப்பதாரிகள் நடத்தை, குறிப்பிட்ட பதவிக்குத் தகுதி ஆகியன பற்றி விளக்கும் அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள் மூன்று. (அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் இவ்வுப பகுதியில் கேட்டுக்கொண்டபடி நற்சான்றிதழ்கள் அனுப்ப வேண்டியதில்லை.)

6. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தப்பட்ட மற்றைய விடயங்கள் பற்றிய கடிதத்தொடர்புகளோ மின்சார முயற்சிகள் பகுதிப் பதில் முகாமையாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி, அவ்வுத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கோ அல்லது இத்திணைக்களத்திலுள்ள வேறு எவரினதும் சொந்தப்பெயருக்கோ அனுப்பப்படக்கூடாது.

7. இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II ல் பிரசுரமாகியிருக்கும் பகிரங்கசேவை நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்க.

எம். ஐ. அலீஸ்,
பதில் முகாமையாளர்,
மின்சார முயற்சிகள் பகுதி.

மின்சார முயற்சிகள் பகுதித் திணைக்களம்,
த. பெ. இல. 540,
கொழும்பு. 6 மார்ச், 1969

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### 3 ந் தர மின்சார முகாரி பதவி

1. முழுப்பெயர் :————.
(தனித்தனி எழுத்துக்களில்)
(அ) குடும்பப்பெயர் :————.
(ஆ) வேறு பெயர்கள் :————

2. விலாசம் :————.

3. (அ) சரியான வயது———— வருடங்கள் ——— மாதங்கள் ——— நாட்கள்.
(ஆ) பிறந்த திகதி :————.

4. தேசிய இனமும், எப்படிப் பெறப்பட்டதென்றும் :————.

5. பின்வருவோரின் பிறப்பிடங்கள்.—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
(விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவராகில் மேலே காட்டப்பட்டுள்ள (அ) வுடன் (ஆ), (இ) நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையிற் பிறவாதவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ) அல்லது (இ) யும் (ஈ) யும் நிரப்பப்படல் வேண்டும்).

6. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் :————.

7. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் (சேர்ந்த, விலகிய திகதிகளுடன்) :————.
(அ) தராதரக் கல்விக்காக :————.
(ஆ) உயர் தொழிற் கல்விக்காக:————

8. கல்வித்தகைமைகள் :————.
(பெற்றுள்ள உயர்ந்த தராதரப் பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

9. உயர்தொழிற் கல்வியும் தொழில் நுட்பத் தகைமைகள் பெற்றிருந்தால் திகதிகளுடன் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்) :————.

10. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்ட காலம் முதல் பார்த்த தொழில் விபரங்கள், அவற்றில் சேர்ந்த விலகிய திகதிகளுடனும் பெற்ற வேதனங்களுடனும் குறிப்பிடுக :————.

11. விசேட தகைமைகள்/அனுபவம் யாதேனுமிருந்தால் அதன் விபரங்களைக் குறிப்பிடுக:————

12. நற்சாட்சியளிப்போர் மூவரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் :————.

13. விண்ணப்பதாரியின் நடத்தை பற்றி நற்சாட்சிப்பத்திரம் கொடுத்துள்ள மூவரின் பெயர்கள், பதவிகள் :————.
(அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

14. கட்டுள்ளியாக இருப்பின் விவரம் :————.

15. மோட்டார்கார் உண்டா அல்லது மோட்டார் சைக்கிள் ஓடத் தெரியுமா ? :————.

மேலே காட்டப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானதெனவும் உண்மையானதெனவும், பிழையற்றதெனவும் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டயீடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-574—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## கமத்தொழிற்றிணைக்களம்

### வேலைகள் பரிசோதகர் பதவிகள்

கமத்தொழிற்றிணைக்களத்தின் பொறியியற் பிரிவுக்குத் தேவையான வேலைகள் பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்—ஆண்டொன்றுக்கு ரூபா 1,860—120—ரூபா 3,780 (ஆண்டுக்கு 2,820 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு), ரூபா 3,900—180—ரூபா 5,340.

3. **ஒப்பந்த நியதிகள்.**—(1) இப்பதவி நிலையானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும். இந்நியமனம் மூன்றுண்டுக் காலத்துக்கு தகுதிகாண் நிலையினதாகும்.

(2) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தீவின் எப்பாகத்திலும் சேவைசெய்ய வேண்டியவராவர். அவர் இத்திணைக்

களத் தலைவரினல் தீர்மானிக்கப்படும் முறையிலே சொல்லப்படும் தொகையான பிணையைக் கட்டுதலும் வேண்டியதாகலாம்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனபற்றி சான்று அளித்தல் வேண்டும்.—

(அ) 1.3.1969 ல் 25 வயதுக்குக் கீழ்ப்படாமையும் 35 வயதுக்கு மேற்படாமையும் ;

(ஆ) உச்ச ஒழுக்கப்பண்பும் உடலுறுதியும் ;

(இ) குடியியல் எந்திரவியலில் தொழில் பயிலுவோராக 5 ஆண்டுகளைக் கழித்து பின்னிணைப்பு 4(அ) ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அ.க. பகுதியின் திணைக்களத் தகுதியாக்கும் பரீட்சையிற் சித்தியடைந்தமையும் அல்லது

(2) படம் வரை அறிஞராக அல்லது ஓவசியராக இருந்து 5 ஆண்டுகட்கு மேற்பட்ட செய்முறைக்குரிய அனுபவத்துடன் பின்னிணைப்பு 4(அ)ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அ.க. பகுதியின் திணைக்களத் தகுதியாக்கும் பரீட்சையிற் சித்தியடைந்தமையும் ;
அல்லது

(3) தொழினுட்ப கல்லூரியொன்றிலே குறைந்தபட்சம் 4 ஆண்டு காலத்துக்குரிய குடியியல் எந்திரவியற் பயிற்சி நெறியை வெற்றியாக முடித்துக்கொண்டமையும் ;
அல்லது

(4) நிலஅளவை, மட்டம் பார்த்தல் ஆகியவற்றில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியிடம் உத்தரவுச் சீட்டுப்பெற்று நீர்வழங்கல், அமைப்பு வேலை ஆகிய கட்டுவேலையில் ஈராண்டு அனுபவமுள்ளமையும் ;
அல்லது

(5) குடியியல் அல்லது இயந்திரத்தொழிற்பொறியியல் தொழில் பயிலுங் காலத்தையும் செய்முறை அனுபவம் பெறுதலையும் மொத்தம் 5 ஆண்டுகட்குக் குறையாத காலத்துக்காயினும் முடித்துக்கொண்டு அத்துடன் இருசார்பிலும் பலத்த கட்டுவேலைகளிலும் நிலஅளவையிலும் மட்டம் பார்த்தலிலும் கொள்கை அறிவும் செய்முறை அனுபவமும் உள்ளமையும்.

குறிப்பு.—(மேலே சொல்லப்பட்ட தகைமைகளுள்ள அபேட்சகர்கள் நியமனம் பெற்றுக்கொள்ளமுன்னர் அரசாங்கக் கட்டுவேலைப்பகுதி அதிபதியால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கும் தோற்ற வேண்டியவர்களாகலாம். அத்துடன் நியமனம் பெற்று ஈராண்டுகளுள் பின்னிணைப்பு 4(அ) ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அரசாங்க கட்டுவேலைத் திணைக்களப் பரிசோதனையில் சித்தியடைதலும் வேண்டும்) அல்லது

(6) க. பா. சா. பரீட்சையிலாயினும் சித்திபெற்று தெரு வீதி கட்டடவேலைகளில் அல்லது நீர்வழங்கல்களில் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் செய்முறை அனுபவம் பெற்றமையும் நிலஅளவையிலும் மட்டம் பார்த்தலிலும் நல்ல அறிவு உள்ளமையும்.

குறிப்பு.—(மேலே சொல்லப்பட்ட தகைமைகளுள்ள அபேட்சகர்கள் நியமனம் பெற்றுக்கொள்ள முன்னர் அரசாங்க கட்டுவேலைப்பகுதி அதிபதியால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கும் தோற்றவேண்டியவர்களாகலாம். அத்துடன் நியமனம் பெற்று ஈராண்டுகளுள் பின்னிணைப்பு 4(அ) ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அரசாங்க கட்டுவேலைத் திணைக்களப் பரிசோதனையில் சித்தியடைதலும் வேண்டும்.)

5. அபேட்சகர் பின்வருவனவற்றின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் அணைத்து அனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றிதழ் ;

(2) கல்வித்தகைமைகளுள் உயர்தரச் சான்றிதழ் ;

(3) நன்னடத்தைச் சான்றிதழ்களுள் சமீபகாலத்திய மூன்று ;

(4) தொழினுட்பத் தகைமைகள், அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்.

6. இணைக்கப்பட்டுள்ள படிவம் போன்ற ஒன்றிலே விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளர் (பரிபாலனம்), பேராதனை என்னும் முகவரிக்கு 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் தேதியன்று அல்லது முன்னர் சேரக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளரின் (பரிபாலனம்) பெயரை முகவரியில் எழுதலாகாது.

7. இவ்வர்த்தமானியின் I ம் பாகத்தின் II ம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்கள் பற்றிய பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

எல். பீ. மாறம்பே,
பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளர் (பரிபாலனம்).

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை, 4 மார்ச், 1969.

**வேலைகள் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்**

1. பெயர் :————.
2. விலாசம் :————.
3. நாட்டினம் :————.
4. பிறப்புப் தேதி :————
5. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்புத் தேதியும் இடமும் :————.
6. மிகக்கூடிய கல்வித் தகைமைகள் :————
7. தொழினுட்பத் தகைமைகள் :————
8. அனுபவம் :————.
9. இணைக்கப்படும் குணச்சான்றிதழ்கள் அளித்தோரின் பெயர்கள் :————.

————,
தேதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

3-460—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## கூட்டு மொத்தவிற்பனைத் தாபனம்

**தலைமைப் பாதுகாப்புப் பணியாளர் நிலை**

கீழ்வரும் தகுதிகள் உடைய இலங்கை மக்களிடமிருந்து மேலே கூறப்பட்ட நிலைக்கு மனுக்கள் கோரப்படுகிறது.

(அ) பொலீஸ் இலாகாவில் மிகக்குறைந்த 10 வருடப் பணியில் 5 வருடம் மட்டுமாவது அதிகாரப் பணிவுப் பணியாளராக (கசரட் ஆபீசராக) இருந்திருக்க வேண்டும், அல்லது

(ஆ) ஆயுதம் தாங்கிய படைகளில் உள்ள செயல் உரிமை பெற்ற பணியாளர் (கமிஷண்ட் ஆபீசர்கள்) பொலீஸ்/பாதுகாப்பு வேலையில் மிக்க குறைந்தது 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

(இ) வயது : 30 தொடங்கி 50 மட்டும்.

சம்பள ஏற்றப்படிமுறை.—மாதத்துக்கு ரூ. 1,250—50—1,500 (எல்லாம் அடங்கியது).

சேமநல நிதி.—வேலை பெறுபவர் 10 விகிதமும், வேலைகொடுப்பவர் 15 விகிதமும்.

முழு விபரங்களும் அடங்கிய உங்கள் மனுக்கள் ஆக்கள் தொகுதி முகாமையாளர், கூ. மொ. வி. தா. 21, வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு 21.3.69 அன்று அல்லது முன்னதாகத் கிடைக்க அனுப்பப்படல் வேண்டும்.

கூ. மொ. வி. தா., ஆக்கள் தொகுதி முகாமையாளர்.
21, வக்சோல் வீதி, கொழும்பு 2. 1969 மார்ச் 4.

3—605.—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### பயிற்சிப் போர்மன் பதவிகள்

அம்பாறை, ஹாடி தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் டிப்ளோமா பட்டம் அல்லது கட்டுபெத்த, இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரியில் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் தராதரப்பத்திரத்தை அண்மையில் பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் பயிற்சிப் போர்மனாக நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள இறுதிப்பரீட்சைகளை எடுத்து அவற்றின் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களும் கவனத்திற்கு எடுக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்கள் இருவருட காலத்திற்கு பயிற்சி பெற வேண்டப்படுவர், பயிற்சிக்காலத்தில் எல்லாம் உட்பட படியாக ரூபா 300 வழங்கப்படும். கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்படும் தரத்தை அடையும் பயிற்சியாளர்கள் இரண்டாந்தரப் போர்மன் பதவிகளுக்கு பின்வரும் சம்பள விகிதத்தின் ஆரம்பத்தில் நியமிக்கப்படுவார்கள்.

ரூபா 360—450 (எல்லாம் உட்பட) மாதமொன்றிற்கு
6 × 15

அத்துடன் உயர்தரத்திற்கு உயர்ச்சி பெற்றால் பின்வரும் சம்பள விகிதத்தில்.

தரம் I—ரூபா 400—600 (எல்லாம் உட்பட) மாதமொன்றிற்கு
8 × 25

சிரேட்ட தரம் I—ரூபா 550—750 (எல்லாம் உட்பட) மாதமொன்றிற்கு
8 × 25

இக்கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில் விண்ணப்பதாரர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 28.3.69 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்காணும் விலாசத்திலுள்ள பொது முகாமையாளருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

தபாலில் விண்ணப்பப்படிவங்களை பெறவிரும்புபவர்கள், தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்டுள்ள தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

135, யூனியன் இடம்,
த. பெ. 1367,
கொழும்பு 2.
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

3-617—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் கணேகொட பிரிவிற்கு பிறப்பு இறப்பும் குருவிட்டி கோறளை பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

கணேகொட பிறப்பு இறப்பு, பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்பமுடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 15 ம் திகதியன்று அல்லது அதற்குமுன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிக பெரும்பகுதிப் பதிவுகாரர்,
மாவட்ட பதிவாளருக்காக.

இரத்தினபுரி மாவட்டம்,
பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு பங்குனி மீ 1 ம் உ.

3-483—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## உள்ளூராட்சி அமைச்சின் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் தொழில் பயில் படவரைஞர் பதவிகள்

உள்ளூராட்சி அமைச்சின், நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் தொழில் பயில் படவரைஞர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படமாட்டாது. ஆனால் எல்லா விண்ணப்பங் பங்களும் கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் 1.4.1969 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம் :** இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 960—72. ரூபா 1,104

**குறிப்பு.**—பந்திகள் 4 (2) (அ), 4 (2) (ஆ) ல் காட்டப்பட்ட தகைமைகளை உடைய ஊழியர்கள் குறிப்பிடப்பட்ட வருடாந்தத் தொடக்கச் சம்பள அளவுத்திட்டமான ரூபா 1,032 க்கும் ரூபா 1,104 க்கும் தகுதி உடையவராவர்.

3. **வயதெல்லை :** விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வியும் ஏனைய தகைமைகளும் :**

(1) தூயகணிதத்தை ஒரு பாடமாகக் கொண்ட சிரேட்ட தராதரப் பரீட்சை நற்சான்றிதழை உடையவராகவும் ; அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ் பாஷைகளுடன், தூய கணிதம் உள்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். இத்தகைமையை இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில் தோன்றிப் பெற்றிருப்பதுடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடையவராகவும் இருத்தல் வேண்டும் :

(2) (அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் (படவரைஞர் பயிற்சி நெறியை) ஒரு வருட முழு நேரத்தில் பூர்த்திசெய்தவராகவும், அல்லது

(ஆ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளர்களுக்கான (இரு வருட) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவராகவும், அல்லது

(இ) கட்டிட அமைப்பில் 1, 2, 3 ம் பயிற்சி நெறியை மாலை நேரத்திலோ அல்லது முழு நேரமல்லாத நேரத்திலோ பூர்த்தி செய்யதவராகவும் இருக்க வேண்டும்.

5. **ஆள் சேர்க்கும் முறை ;** தகுதி பெற்ற விண்ணப்பகாரர்கள் இந்நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (உண்மைப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு : ஞானஸ்ஞானச் சான்றிதழோ அல்லது பாடசாலைக்கான பிரமாணச் சட்டக் கோவைக்கென வழங்கப்பட்ட சான்றுப் பத்திரங்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)

(ஆ) நற்பண்புச் சான்றிதழ்கள் மூன்று, அவற்றில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த பாடசாலை அதிகாரியிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(இ) பெற்ற உயர்தொழிற் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(ஈ) கல்விச் சான்றிதழ்களும், சிங்களம் அல்லது தமிழ் பரீட்சையில் சித்தி எய்திய சான்றிதழ்களும்,

7. **ஒப்பந்த நிபந்தனைகள் :**

(1) பதவிகள் தற்காலிகமானது. அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவு தொகை செலுத்த வேண்டும்.

(2) தெரிவு செய்யப்பட்டவர்கள் குறித்த பயிற்சியை நேர்மையாகவும் ஊக்கமாகவும் (அதாவது 2 ம் தரப் படவரைஞர் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பந்தி 3 (1) ல் குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சை) முடித்து 2 ஆம் தர படவரைஞர்க்குரிய தகைமையைப் பெற்று பயிற்சி முடிந்தபின்னர் திணைக்களம் விரும்பின் 2 ஆம் தர படவரைஞராக 5 வருடங்களுக்குக் குறையாமல் சேவையில் ஈடுபடுவதாகவும் திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்காகப் பயிற்சி பெறுவோரும் அவர்களின் பெற்றோரும் அல்லது பாதுகாவலரும் 5,000 ரூபாவிற்கு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

(1) விண்ணப்பகாரர் மேலே பந்தி 3 (2) (அ) இன் கீழ் உள்ள தகைமை திணைக்களச் செயல்முறைப் பயிற்சி நெறியொன்றைப் பெறும்பொழுது 3 (2) (ஆ) இன் கீழ் உள்ள தகைமைகளை ஒரு வருடத்திற்கான செயல்முறைப் பயிற்சியில் பெறலாம்.

(2) பயிற்சி நெறியை முடித்துத் திணைக்களத்தால் நடாத்தப்படும் குறித்த பரீட்சையில் சித்தியெய்தின் நிரந்தரமான இளைப் பாற்றுச் சம்பளத்திற்கு உட்பட்ட 2 ஆம் தர படவரைஞராக ரூபா 1,260—120 ரூபா 3,780 சம்பள அளவுத் திட்டத்தில் பதவி பெறத் தகைமை உடையவராவர்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தமது கடமைகளை அலுவலகத்திலும் ; வெளியிலும் செய்தல் வேண்டும்.

9. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பலாம். விண்ணப்பத்தை அனுப்பும்போது திணைக்களத்தலைவர், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், விண்ணப்பதாரரை நியமனத்திற்காக விலக்கவோ முடியாதோ என்பதைக் குறிப்பிடவேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் இரத்மலானை, உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதிச் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (நிதியும் தாபனமும்) அனுப்பப்படவேண்டுமேயன்றி இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்கும் பெயர் குறிப்பிட்டு எழுதக்கூடாது.

11. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

12. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. பத்மநாதன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்.
(நிதியும் தாபனமும்)

உள்ளூராட்சி அமைச்சு,
நீர்வழங்கல், வடிகாலமைப்பு, உள்ளூராட்சி
வேலைகள் பகுதி,
இரத்மலானை,
1969.3.1.

மாதிரிப்படிவம்

**உள்ளூராட்சி அமைச்சின் நீர் வழங்கல், வடிகாலமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் தொழில் பயிலும் படவரைஞர் பதவிகள்**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ————.
(பெரிய எழுத்தில்)
(அ) பெயர் : ————.
(ஆ) மறு பெயர் : ————.

2. தபால் முகவரி : ————.

3. பிறந்த திகதி : ————
(1.4.1969 ல் சரியான வயது : ....வருடங்கள் ....மாதங்கள்)

4. தேசிய இனமும் எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————
(அ) பரம்பரையாக : ————.
(ஆ) பதிவினால் : ————.
(பதிவினால் எனில் திகதியும் சான்றிதழின் இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்)

5. பிறந்த இடம் : ————.
(அ) விண்ணப்பதாரரின் : ————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பாட்டன் : ————.

6. விவாகம் ஆனவரா, தனிப்பட்டவரா : ————.

7. படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் : ————.
(சேர்ந்து விலகிய திகதிகளுடன்)

8. கல்வித் தகைமைகள் : ————.
(கல்வித் தகைமைகள் பெற்ற திகதிகளைக் குறிக்கவும்)
(அ) பொதுக் கல்வி : ————.
(ஆ) உயர் தொழில் தகைமைகள் அல்லது தொழில் நுட்பத் தகைமைகள் : ————.

9. பாடசாலையை/கல்லூரியை விட்ட காலம் முதல் பார்த்த தொழில் விபரங்கள் திகதிகளுடன் : ————.

10. ஏதும் விசேட கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சிகள் அல்லது அனுபவம் : ————.

11. சிங்களத்திலும் தமிழிலும் பெற்ற அதி உயர்ந்த தகைமைகளைக் குறிப்பிடுக : ————.

12. 4 (2) ஆம் பந்தியின் என்ன வாசகத்தின் கீழ் தாங்கள் தகுதி உடையவராக உரிமை கோருகிறீர்கள் : ————.

13. மேலும் ஏதாவது விபரங்கள் இருப்பின் : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டமும் இன்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி : ————.

3-470—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## படிப்பு விடுதலைக்குப் பல் வைத்தியர்களைத் தெரிவு செய்தல்

**1968/69 ஆம் கல்வித் தவணைக்காலம்**

1969 ஏப்ரில் 10 ஆந் திகதியன்று 40 வயதுக்குக் குறைந்தவர்களாகவும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகவும் உள்ள I ஆந் தர அல்லது II ஆந் தரச் சௌக்கியத் திணைக்களப் பல் வைத்தியர்களிடமிருந்து கீழே (1) ஆம், (2) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான படிப்பு விடுதலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர் கீழே (3) ஆம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளை ஒன்றில்—

(i) ஏற்கெனவே பெற்றுள்ளவர்களாக, அல்லது

(ii) 1969 ஒக்ரோபர் 1 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளும் சாத்தியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

| (1) நிபுணத்துவம் | (2) தகைமைகள் | (3) தேவைகள் | (4) புலமைப்பரிசிற் காலம் |
|---|---|---|---|
| பல் மருத்துவம் (டென்ரிஸ்ற்றி) | எவ். டி. எஸ். ஆர். ஸி. எஸ். | முதனிலை எவ். டி. எஸ். ஆர். ஸி. எஸ். | 2 வருடங்கள் |

2. எவ். டி. எஸ். ஆர். ஸி. எஸ். தகைமைகளைக்கொண்ட பல் வைத்தியர்களை நிபுணர்களாக நியமிக்கும் விடயம் பல் வைத்திய நிபுணர்களுக்கான ஊழியர் கோப்பில் உள்ள வெற்றிடங்களைப் பொறுத்ததாயிருக்கும்.

3. படிப்பு விடுதலை வழங்குவதற்குத் தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் சலுகைகள் அளிக்கப்படும் :—

(i) குறித்த காலத்திற்கு முழுச் சம்பளம்.

(ii) அரசாங்கக் கணக்கில் இங்கிலாந்து செல்வதற்கும் அங்கிருந்து திரும்புவதற்குமான பயணச் செலவு.

(iii) உத்தியோகத்தர் சித்தியெய்தும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பு நெறிகள், பயிற்சி, பரீட்சைகள் என்பவற்றின் சகல கட்டணங்களையும் (தனிப்பட்ட கல்விப் போதனைக் கட்டணங்கள் தவிர) மீள நிரப்பல்.

(iv) உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே பயிலுதற்குரிய காலத்துக்கான உதவிப் பணங்கள் 276 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை நியதிகளின்படி கொடுக்கப்படத்தக்கன.

4. உத்தியோகத்தர் பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்கப்படுவர் :—

(i) குறித்த தகைமைகளை விதித்த காலத்துள் பெறுவதாக,

(ii) (சேவையிலிருந்து விலக்கப்படுதல், சேவையில் தொடரத் தவறியதாகக் கருதப்படும் என்ற நியதியுடன்) நாட்டிற்குத் திரும்பிய பின் 15 வருடங்கள் அரசாங்கத்தில் சேவை செய்வதாக,

(iii) தனிமுறைத் தொழிலைத் தவிர்த்து, முழுநேர உத்தியோகத்தராகச் சேவை செய்வதாக,

(iv) உடன்படிக்கையில் விதித்த நிபந்தனைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றத் தவறின் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தொகைகளைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை ஏற்பதாக.

5. பல்வேறு பயிற்சி நிலையங்களிலும் தங்குவதற்கான வசதி, இடங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்க இத்திணைக்களம் முயலும். ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை உயர்தானிகர் மூலம் ஏற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாகத் தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் தமது தேவைகளை எனக்கு அறிவிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

6. உத்தியோகத்தர்கள் அவர்களது விண்ணப்பங்களை 1969 ஏப்ரில் 10 ஆந் திகதிக்குப் பிந்தாமல் இக்கந்தோரில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பும்படி கேட்கப்படுகின்றனர். விசேடமாகக் கவனிக்கப்படுதற்கு ஏதாவது காரணங்கள் இருப்பின் அவற்றையும் அவர்கள் குறிப்பிடலாம். விண்ணப்பங்கள் இயன்றளவில் தக்க விளக்கம் அளிப்பனவாக இருக்கவேண்டும். நிராகரிக்கப்பட்டனவாகக் கருதப்படும் முந்திய விண்ணப்பங்களின் குறிப்புகளை அல்லது அவற்றின் தொடர்புகளை அவை கொண்டிருத்தலாகாது.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. பி. குணசேகரா,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி அலுவலகம்,
கொழும்பு,
1969 ம் ௵ மார்ச் 6 ந உ.

3-567—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## சௌக்கியத் திணைக்களம்

### வேலைத்தலப் போதனாசிரியர் பதவி

### குட்டரோக ஆசுபத்திரி, ஹெந்தலை

சௌக்கியத் திணைக்களத்தில் வேலைத்தலப் போதனாசிரியர் பதவியொன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப விண்ணப்பங்களைத் தயாரித்து 1969 ஏப்ரில் 5 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் எனக்குச் சேரும்படி அனுப்பவேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருடாந்தம் ரூபா 960—72—1,752.

3. **அலுவல் நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பளமுள்ளதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் விதவை, அநாதர் இளைப்பாற்றிச் சம்பளத்திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துமாறு கேட்கப்படுவார்.

4. **தேவையான கல்வித்தகைமைகளும், பிற தகைமைகளும்.**—ஒவ்வொரு அபேட்சகரும் தான்—

(i) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது உயர் பரீட்சையில் சித்தியெய்தியவரென்றும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட உறுப்புக்கேட்டு நிலையமொன்றில் செயற்கை உறுப்புக்களையும், சப்பாத்துக்களையும் செய்வதில் 5 வருட அனுபவம் உள்ளவரென்றும் திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். சப்பாத்துச் செய்தல், அளவுகளெடுத்தல், மாதிரிகள் வரைதல், உறுப்புக்கேட்டுச் சாதனங்கள் செய்தல், உருக்கியொட்டுதற் பயிற்சி, பிரம்புவேலை, தச்சுவேலை என்பவற்றில் சாதாரணமுறை நுண்தொழிலியற் பாடசாலையில் விசேட பயிற்சியொன்றை முடித்த தொழில்பயில்வோரும் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர். இத்தகைய அபேட்சகர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, அவர் கொழும்பு, பெரியாசுபத்திரி உறுப்புக் கேட்டு வேலைத்தலத்தில் ஒருவருடப் பயிற்சி பெற்றபின் வேலைத்தலப் போதனாசிரியராக நியமிக்கப்படக்கூடும்.

5. **வயதெல்லை.**—அபேட்சகர்கள் 5.4.69 ஆந் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களான அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை நிபந்தனை கிடையாது.

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்றை அல்லது முழுவதையும் கேட்கப்படும் நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**கவனிக்க**—ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது அவை இரண்டும்.

**கவனிக்க** (i) விண்ணப்பத்துடன் சாதனங்களோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் வேலை செய்யும் திணைக்களங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வபேட்சகர்கள் சௌக்கியத் திணைக்களத்தில் நியமனங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவர்களை விட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் வேலைசெய்யும் திணைக்களங்களின் தலைவர்கள் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் மாத்திரம் அவ்விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுக்கப்படும்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளும் சௌக்கிய சேவை அதிபதி, தபாற்பெட்டி 500, கொழும்பு என்று விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயர் விலாசத்துக்கு அனுப்பப்படக்கூடாது.

9. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. பி. ஏ. பெரேரா,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி அலுவலகம்,
தபாற் பெட்டி 500,
காலிமுகச் செயலகம் (காலிபேஸ் செக்கிரட்டேரியட்),
கொழும்பு 1,
1969 ம் ௵ மாச்சு மீ 6 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### வேலைத்தலப் போதனாசிரியர் பதவி

1. முழுப்பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)
(அ) குடும்பப் பெயர் : ————.
(ஆ) ஏனைய பெயர்கள் : ————.
2. தபால் விலாசம் : ————.
(விலாச மாற்றம் எதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவேண்டும்)
3. பிறந்த திகதி : ————.
4. ———— ஆந் திகதியன்று சரியான வயது : ————.
————வருடங்கள் ————மாதங்கள்————நாட்கள்————
5. தகப்பன் அல்லது பாதுகாவலரின் பெயரும், விலாசமும் : ————
6. தேசிய இனமும், எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதும் : ————.
7. பிறந்த இடம் : ————.
(அ) விண்ணப்பகாரர் : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பகாரரின் தகப்பன் வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பகாரரின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.
8. ஆணு/பெண்ணு ? : ————.
9. விவாகமானவரா ? தனித்தவரா ? : ————.
10. கல்வித் தகைமைகள் : ————.
11. நுண்தொழிற்றகைமைகள் : ————.
12. பாடசாலையை விட்ட காலந்தொட்டுப் பார்த்த தொழில் விவரங்கள்: ————.
13. விசேட தகைமைகள் : ————.
(இந்த அறிவித்தலில் 4 (ii) ஆம் அல்லது (iii) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விசேட தகைமைகளையும், அனுபவத்தையும் அல்லது அவையிரண்டில் எதையாவது நீர் கொண்டுள்ளீரா ? ஆம் எனில், தயவுசெய்து அவற்றின் முழு விவரங்களையும் தருக)
14. நீர் சௌக்கியத் திணைக்களத்தில் ஒரு ஊழியரா ? : ————.
(ஆம் எனில், அத்தொழிலின் முழு விவரங்களையும் தருக)

இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன், இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமைநீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

திகதி : ————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

3-565—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### வெற்றிடம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆராய்ச்சி, திட்டமிடல் அபிவிருத்திப் பகுதியில் III ஆம், IV ஆம் அல்லது V ஆம் தர பொருளியலறிஞர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

2. சம்பள அளவுத் திட்டங்கள்:—மாதமொன்றுக்கு (எல்லாமுட்பட)—

III ஆம் தரம் : ரூபா 1,100—50 —ரூபா 1,700. ரூபா 1,350 க்கு முன்பு வினைத்திறமைகாண் தடை உண்டு.

IV ஆம் தரம் : ரூபா 700—40 × 5 உம் 50 × 6 உம்—ரூபா 1,200. ரூபா 900 க்கும் ரூபா 1,050 க்கு முன்பும் வினைத் திறமைகாண் தடைகள் உண்டு.

V ஆம் தரம் : ரூபா 600—40 ரூபா—1,000. ரூபா 800 க்கும் ரூபா 920 க்கு முன்பும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

குறிப்பு.—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி தகைமைக்கும் அனுபவத்திற்குமேற்ப மேற்படி சம்பள அளவுத் திட்டத்தில் தகுந்த சம்பள நிலைகளில் அமர்த்தப்படலாம்.

3. தகைமைகள்.—

(i) வயது—1.3.1969 ஆம் திகதியன்று 27 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும்.

(ii) பொருளியலில் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு சிறப்பு (ஹொனர்ஸ்) பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருக்கவேண்டும். போக்குவரத்து நிறுவகத்தில் தகைமை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகவிருக்கும்.

குறிப்பு.—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி, தகைமைகளுக்கேற்றபடி V, IV அல்லது III ஆம் தரத்தில் அமர்த்தப்படலாம்.

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவர்களுடைய அவ்வந்தப் பகுதித் திணைக்களங்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். அத்துடன், தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள், 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளுக்கு ஏற்பசச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபனம் மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. வேலை நிபந்தனைகள்.—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(i) நியமனத்திற்கு முன்பு உடலுறுதியுள்ளவரென்று/உடலுறுதியுள்ளவர்களென்று வைத்தியப் பரீட்சைக்காளாகிச் சித்தியெய்த வேண்டும்.

(ii) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(iii) தனது/தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்கு சிங்கள மொழியில் தேர்ச்சிபெற வேண்டும்.

(iv) இலங்கையின் எப்பகுதியிலேனும் சபையின் எப்பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டு, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்கு 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின்
ஆளணி முகாமையாளர்.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்படவேண்டும்)
5. 1.3.1969 ஆம் திகதியன்று சரியான வயது :—
————வருடங்கள் ————மாதம் ————நாள்
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவளியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா (விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதுகளும்) : ————.
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி (படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக) : ————.
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள் உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக) (சான்றிதழ்களின் பிரதிகள்—மூலப் பிரதிகளல்ல—இணைக்கப்படவேண்டும்) : ————.
10. தொழினுட்பத் தகைமைகள (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள் உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக) (சான்றிதழ்களின் பிரதிகள்—மூலப் பிரதிகளல்ல—இணைக்கப்படவேண்டும்) :————.
11. தொழில் : ————.
(பாடசாலை விட்டுவிலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகிய திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைக் கூறுக) : ————.
13. விண்ணப்பத்திற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விபரங்களைச் சுருக்கமாகத் தருக) : ————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
14. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? : ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? அங்ஙனமாயின் விபரங்கள் தருக :————
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும்—

(1) ————.

(2) ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்கு பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

3-549—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

## விலைமதிப்புத் திணைக்களம்

### பரிசோதகர் பதவிகள், தரம் II

விலைமதிப்புத் திணைக்களத்தில் பரிசோதகர், தரம் II பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில், கீழேயுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்டுப் பிரதம விலைமதிப்பாளர், 5, 7, அலெக்சாந்திரா இடம், கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு 29.3.1969 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு :** விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " பரிசோதகர், தரம் II பதவிக்கு விண்ணப்பம் " என்று குறிப்பிடல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு : ரூபா 1,860—120—ரூபா 3,780 வருடாந்தம். (ரூபா 2,820 பெறமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு).

தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியேற்றப்படுவதற்கு முன்னதாக குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையும்படி கேட்கப்படுவார்கள்.

3. **நியமன நியதிகள்.**— பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிமையானவையுமாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். அவர்கள் தீவின் எப்பாகத்திலேனும் சேவை செய்யும்படி அழைக்கப்படுவதோடு தேவையான இடங்களுக்கும் போக்கு வரத்துச் செய்யும்படியும் கேட்கப்படுவர். பிரயாணப் படிகள் நிதிப் பிரமாணங்களின்படி கொடுக்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—(i) ஒவ்வொரு அபேட்சகரும் 29.3.1969 திகதியில் 18 வயதிற்குக் குறையாதவர் எனவும் 30 வயதிற்கு மேற்படாதவர் எனவும் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.

(ii) அபேட்சகர்கள் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தரப் பரீட்சையில் கணித பாடத்துடன் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அல்லது திணைக்களத்தில் ஏலவே சேவையில் இருப்பவரானால் இத்தோடு மேலதிகமாகப் பின்வரும் தகைமைகளுள் ஒன்றை உடையவராய் இருத்தல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் தொடக்கத் தேர்வுப் பரீட்சை, அல்லது

(ஆ) இலங்கை விவசாயப் பாடசாலையின் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, அல்லது

(இ) நில அளவையினும் மட்டம் பார்த்தலினும் நில அளவையாளர் நாயகத்தின் அனுமதிப் பத்திரம், அல்லது

(ஈ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் விலைமதிப்புத் தகுதித் தேர்வுப் பயிற்சியில் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளையும் இணைக்க வேண்டும் :—

(அ) மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(ஆ) கல்வித் தகைமைகள், நியமனத்திற்குத் தகுதியும் குணமும் முதலியன பற்றிய மூன்று சமீபத்திய குணச் சான்றிதழ்கள்.

(இ) பிறப்புச் சாட்சிப் பத்திரம். அல்லது பதிவாளர் நயாகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய விசேட சான்றுப் பத்திரம். (உண்டானால்)

**குறிப்பு :**—(i) அபேட்சகர்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தை அல்லது வயது பற்றிய விசேட சான்றுப் பத்திரத்தை பின்னொரு திகதியில் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. ப. (உயர்தர) ப் பரீட்சையில் சித்தியெய்திய அபேட்சகர்கள் பட்டப் பரீட்சை எடுப்பதற்குத் தேவையான ஆகக்குறைந்த நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளனர் என்பதற்கு எழுத்து மூலமான சான்று காட்ட வேண்டும்.

6. அரசாங்க சேவையில் ஏலவே உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் நிருவாகப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற அப்படியான விண்ணப்பங்கள், திணைக்களத் தலைவரினால் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற்றிருப்பதோடு தொடர்புடைய திணைக்களத் தலைவர் ஏற்றுக் கொள்ளும் விதப்புரையோடு தாமதத்திற்கு தேவையான காரணங்களையும் காட்டாவிடின் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்க.

டி. பி. பி. அபயகுணவர்த்தன,
பிரதம விலைமதிப்பாளர்.

விலைமதிப்புத் திணைக்களம்,
5, 7, அலெக்சாந்திரா இடம்,
கொழும்பு 7.
1969.2.28

## மாதிரி விண்ணப்பம்

### பரிசோதகர் பதவி, தரம் II பதவிக்கான விண்ணப்பம்

### விலைமதிப்புத் திணைக்களம்

1. முழுப் பெயர் :——————
(பெரிய எழுத்தில்)
2. முழு அஞ்சல் விலாசம் :——————
3. (அ) வயது :——————
(ஆ) பிறந்த திகதி :——————
4. பிறந்த இடம் :—
(அ) அபேட்சகர் :——————
(ஆ) அபேட்சகரின் தந்தை :——————
(இ) அபேட்சகரின் தந்தை வழிப் பாட்டனுர் :——————
(ஈ) அபேட்சகரின் தந்தை வழி முப்பாட்டனுர் :——————
5. வம்சாவழியாகவா பதிவு மூலமா நீர் இலங்கையர் :——————
6. மணமானவரா மணமாகாதவரா :——————
7. கல்வித் தகைமையும், கடைசியாகச் சித்தியடைந்த பரீட்சையும் பாடங்களுடன் :——————
8. தேசிய மொழிகளில் எழுதும் பேசும் சக்தி :——————
9. பாடசாலைகளில் சேர்ந்த, விலகிய திகதிகள், படித்த கல்லூரிகளும் பாடங்களுடனும் திகதிகளுடனும் சித்தியடைந்த பரீட்சைகளும் பரிசுகள், புலமைப் பரிசில்களும் பெற்ற வெகுமதிகளும் பற்றிய கல்வி விபரங்கள் :——————
10. விளையாட்டுப் பற்றிய விபரங்களும் பாடசாலையில் அல்லது கல்லூரிகளில் பங்குபற்றிய விசேட நிகழ்ச்சிகளும் :——————
11. பாடசாலையிலிருந்து விலகிய நாளிலிருந்து திகதிகளுடனும் சேவை விபரங்களுடனும் செய்த தொழில் :——————
12. வேறு ஏதாவது விசேட தகைமைகள் (தொழில் நுட்பத் தகைமை அல்லது உயர்தொழிற்றகைமை.) :——————
13. குணச் சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் பதவிகளும் (பிரதிகள், மூலப்பிரதிகளல்ல, இணைக்கப்பட வேண்டும்.) :——————
14. யுத்த கால சேவை விபரம் ஏதாவது இருந்தால் :——————
15. கடன் அல்லது பணசம்பந்தமான தொல்லைகள் உள்ளவரா ;——————
16. வேறு ஏதாவது விபரங்கள் :——————

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் சான்றளிக்கிறேன். இதன்கண் அடங்கியுள்ள எவையேனும் விபரங்கள் பொய்யானவையென அல்லது சரியற்றவையெனக் காணப்படின் அவ்விதம் காணப்படுதல் தேர்வின் முன்னராயின் தகுதியற்றவராகக்கப்படுவதற்கும் அத்தவறு கண்டுபிடிக்கப்படுதல் நியமனத்தின் பின்னராயின் எதுவித நட்டயீடுமின்றி வேலைநீக்கம் செய்யப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

——————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :——————

3—306—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

திறைசேரி இல. 1/23/36 (ஜி)

## சுருக்கெழுத்தாளரின் மாற்றத்துக்குரிய சேவையின் கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கு I ஆம் II ஆம் வினைத் திறமைகாண் பரீட்சைகள் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) 1969 மே

966 ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதியின் இல. 134 (ஜி), 1968 பெப்புருவரி மாதம் 7 ஆந் தேதியின் இல. 170 (ஜி) 1968 நவம்பர் மாதம் 16 ஆந் தேதியின் இல. 199 (ஜி) கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபங்களால் திருத்தப்பட்டவாறு 1955 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியின் இல. 10,844 கொண்ட அரசாங்க அதிவிசேட வர்த்தமானயில் வெளியிடப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளரின் மாற்றத்துக்குரிய சேவையின் பிரமாணக் குறிப்புக்களில் விதிக்கப்பட்டுள்ளதான திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சுருக்கெழுத்தாளரின் மாற்றத்துக்குரிய சேவையின் கீழ்த்தர உத்தியோகத்தர்களின் I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தகைமைத் தடைப் பரீட்சை 1969 மே மாதம் 15 ஆந் தேதி தொடக்கம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. **இப்பரீட்சைகளைப் பரீட்சை ஆணையாளர் நடாத்துவர்**—இப்பரீட்சைகளை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் பிரமாணங்கட்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சாத்திகளுக்குரிய விதிகளும் பிரமாணங்களும் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன.

3. இவ்வறிவித்தலின் முடிவில் இப்பரீட்சைகளுக்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சாத்திகள் தமது சொந்த விண்ணப்பங்களை மாதிரிப்படிவத்துக்கிணங்க முழுத்தாளொன்றின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமன்றி) தயாரித்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். படிவம் தட்டெழுத்தில் தயாரிக்கப்படலாம்; ஆனால் அது செம்மையாகவுந் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மூலம் பதிவு அஞ்சலில் மாலய் வீதி, கொழும்பு 2 என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளரை 1969, ஏப்பிறில் மாதம் 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் விண்ணப்பத்தைக் கொண்டுள்ள உறையின் மேற்பக்க இடது மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். முடிவுத் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும்.

அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்கரும மொழியில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து அம்மொழியிலேயே அவற்றை நிரப்புதல் வேண்டும். எனினும் முன்னர்ச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசகரும மொழியிலோ, ஆங்கிலத்திலோ தமது விண்ணப்பங்களைத் தயாரித்து நிரப்பும் விருப்புரிமை உடையவராவர்.

4. விண்ணப்பங்கள் பெறப்பட்ட எல்லாப் பரீட்சாத்திகட்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகளை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன் கொடுப்பர். பரீட்சைத் தேதிக்கு எழு நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டையை ஒரு பரீட்சார்த்தி பெறுவிடின், அவர் காலந்தாழ்த்தாது மலாய் வீதி, கொம்பனித் தெரு, த. பெ. 1503 என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சைப் பெயர் :—

(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :—

(3) முழு அஞ்சல் முகவரி :—

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இல. அனுப்பிய தேதி :—

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்
செயலாளர்.

பொதுச் திறைசேரி,
கொழும்பு,
1969ம் ஆடு மாச்சு மீ 6 ஆந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்கு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) அனுமதிக்கப்படுவதற்கான விண்ணப்பம்—1969 மே

| |
|---|
| சுட்டிலக்கம் :———— |
| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் |

1. விண்ணப்பக்காரரின் குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் (திரு./திருவாட்டி/செல்வி) :————
   (பெரிய எழுத்துக்களில்)
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் :————
   (பெரிய எழுத்துக்களில்)
3. அலுவலகத்தின் அல்லது திணைக்களத்தின் பெயரும் அலுவலக முகவரியும் :————
4. மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையில் சேர்ந்த தேதி :——
5. அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக நீர் முன்னர்ச் சேர்ந்தவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா ? :————
6. முன்னர் நடந்த பரீட்சை எதனிலும் சுருக்கெழுத்து தட்டெழுத்து, சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியடைந்துள்ளீரா ? அவ்வாறாயின் பரீட்சைத் தேதியைக் கூறுக :————
7. 1964 செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதிய இல. (ஜி) 31 கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிங்களப் பாடத்திலின்றும் உமக்கு விலக்களிக்கப்பட்டிருந்தால், அத்தகைய விலக்கினையளிக்கும் திறைசேரிக் கடிதத்தினைத் தொடர்பு காட்டுக :————
8. எந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு (I அல்லது II) தோற்ற நீர் தகவுடையவரென்பதையும், பரீட்சைக்குரிய பாடங்கள், அவற்றின் மொழி என்பனவற்றையும் கூறுக :————

மேலே என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் சரியானவையென எனது நேர்மையின் பேரில் உறுதிப்படுத்துகின்றேன். இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களுக்கு இணங்கியொழுகவும் நான் உடன்படுகின்றேன்.

......................
**விண்ணப்பக்காரரின் கையொப்பம்.**

தேதி.—

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் செவ்வை பார்க்கப்பட்டு, சரியெனக் காணப்பட்டுள்ளனவெனவும், விண்ணப்பப் படிவத்தின் 8 ஆம் கூட்டில் கூறப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இப்பரீட்சார்த்தி தகவுடையவரென்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன.

.........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

தேதி :—

.....................
பதவிப் பெயர்.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீடசார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளராதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பாவையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சாத்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்தாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்றமுறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளேயோ வேறெவ்விதப் பொருளேயோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. விஞத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ விஞத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்வித்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாகளின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு விஞவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான விஞக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினம் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர் ஆனுல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேருெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல். பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும் இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்டார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு,**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்:—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்மிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிரபார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனுல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பாதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமகாப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள் ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாருக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும் உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றைறையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை எழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும், தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில் ஒவ்வொரு வெற்றுக்கொடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கொடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் வலதுபக்க **மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினா பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள் தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவைக்ண்டமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரீ. டபிள்யு. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2,

3–526—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப்படை

கட்டுநாயக்க இலங்கை அரச விமானப்படையின் விநியோக பேணல் நிலயத்தில் பாவனைக்கு தேவையற்ற கீழ்க்காணும் வாகனங்கள் விற்பனைக்குண்டு. இதற்கான மெழுகிட்ட கேள்விகளைக் கொழும்பு சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள விமானப்படைத் தலைமை நிலயத்திலிருக்கும் இலங்கை அரச விமானப்படைக் கேள்விச்சபைத் தலைவரால் 1969 மார்த்து மாதம் 31 ந் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) லாண்ட் ரேவர் 109" வீல்பேஸ்—வாகன இல. AF 2301

(2) பெட் Fபோர்ட் பிரயாணிகள்/பாரம் கொள்ளும் வான்—வாகன இல. AF2063

(3) F போர்ட்ஸன் தேம்ஸ் 3 தொன்—வாகன இல. AF 2025

(4) வான்காட் பேஸ் II—வாகன இல. AF 2265.

2. திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக்கட்டுப்பணம் ரூபா 150 ஐக் கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமை நிலயத்திலிருக்கும் சிவில் பரிபாலக அதிகாரியும் கணக்காளருமாகியவரிடம் கட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்கங்கொடுக்கப்படும். கேள்விப்படிவங்கள் 1969 மார்த்து மாதம் 30 ந் திகதி நண்பகல் 12.000 மணிவரை கொடுக்கப்படும்.

3. மேலதிக விபரங்கள் கொழும்பு–2 சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப்படைத் தலைமைக் காரியாலயத்தில் பெறற்பாலது.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் கொமடோர்,
விமானப்படைத்தலைவர்.

3–542—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராதபுர உபபிரிவு

அனுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் வட மத்திய பிரிவு பெரும்பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 11 ம் திகதி காலை 10.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவுத்தொகை | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பகலாத்திக்குளம் கட்டுதல் .. | 18,000 .. | 25 |

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் அனுராதபுரம், மகா கந்தராவ, பதவிய, ராசங்கானை ஆகிய நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 7 ம் திகதி நண்பகல் 12.00 வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள், பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்திற் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்கப்படமுன் கேள்விக் கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசன கந்தோரில், அல்லது ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்களை அனுராதபுரம் நீர்ப்பாசன உபபிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அனுராதபுர உபபிரிவு.

அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 4 ம் திகதி.

3–553—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

தலைவர், கேள்விப்பத்திர சபை, கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்கள் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 7 ம் திகதி காலை 10 மணிவரை, வெலோனு மொறட்டுவாவில் உள்ள தொழிற்சாலை வார்ப்புச் சாலையின் அடித்தளத்திற்கு கொங்கிறீட் போடுதலுக்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

2. எந்த அரசாங்க இலாகாவிலாவது ரூபா 10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை கட்டிட வேலைக்கெனப் பதிவுசெய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது ரூபா 50/- ஐ வைப்புப் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் பதிவட்டையையும் சமர்ப்பித்து 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பி. எச். பி. டி சில்வா,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இலக். டிஏ/டி/184.
கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் இலாகா,
கொழும்பு 7, பங்குனி 4, 1969.

3-485—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### அனுராதபுரம் மாவட்டம்—பஹல கிரிபாவ வைத்தியசாலையில் மின்பொறி நிறுவுவதற்கும், வழங்குவதற்குமான கேள்விப்பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய கேள்விப்பத்திரங்களை 1969.4.25 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப் பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "பஹல கிரிபாவ வைத்தியசாலையில் மின்பொறி நிறுவுவதற்கும் வழங்குவதற்குமான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.4.25 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 6 ந் உ.
CT/2/363.

3-543—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## இலங்கை அரச கடற்படை

அண்ணளவாக நூற்றைம்பது (150 தொன்) தொன் கழிவு இரும்பு பெறப்படத்தக்கதானதும் உபயோகிக்கத் தகாததுமான நீர் ஏற்றும் வத்தை (உவாட்டர் லைற்றர்) ஒன்றின் விற்பனைக்கான இலச்சினையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1969 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணிவரை பின்வருபவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விச் சபைத் தலைவர், இலங்கை அரச கடற்படைத் தலைநிலையம், அஞ்சல் அலுவலகப் பெட்டி 593, கொழும்பு.

2. இலங்கை அரச கடற்படைத் தலைநிலையம், கொடிமரத் தெரு, கொழும்பு 1 என்ற முகவரியிலிருக்கும் (களஞ்சிய நிருவாக) பதவி அலுவலரிடமிருந்து பெறப்படற்பாலனவான படிவங்களில் இணைப்படியாக (இரு பிரதிகளாக) கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நிதி, குடியியல் நிருவாகப் பணிப்பாளரின் அலுவலகம், இலங்கை அரச கடற்படைத் தலை நிலையம், கொடிமரத் தெரு, கொழும்பு 1 எனும் முகவரியில் இறுக்கப்பட வேண்டியதான கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாகிய (100 ரூபாவுக்காக) நூறு ரூபாவுக்கான பற்றுச்சீட்டொன்றைச் சமர்ப்பித்ததும் 1969 ம் ஆண்டு

மார்ச்சு மாதம் 30 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை உட்பட, அந் நாள் வரைக்கும் கேள்விப்பத்திர நிபந்தனைகளும் கேள்விப் பத்திர வெற்றுப் படிவங்களும் (களஞ்சிய நிருவாக) பதவி அலுவலரால் வழங்கப்படும்.

3. கொழும்பு, கொச்சிக்கடையிலுள்ள மா. ம. இல. சே. றங்கல்லவின் (அப்பெயரிய கப்பலின்) ஏவல்கொள் அலுவலருடன் ஒழுங்குசெய்தலின்பேரில் இந்த நீர் ஏற்றும் வத்தையானது கொழும்பு, கொச்சிக்கடையில் பரிசோதனை செய்யப்படக்கூடும்.

4. தேவைப்படும் மேற்கொண்ட விபரங்கள், இலங்கை அரச கடற்படைத் தலைநிலையம், கொடிமரத் தெரு, கொழும்பு 1 எனும் முகவரியிலுள்ள (களஞ்சிய நிருவாக) பதவி அலுவலரிடமிருந்து உறுதிப்படுத்தப்படுதல் சாத்தியமாகும்.

ஆர். கதிர்காமர்,
றியர் அட்மிறல்,
கடற்படைத் தளபதி.

இலங்கை அரச கடற்படைத் தலைநிலையம்,
அஞ்சல் அலுவலகப் பெட்டி 593,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 4 ஆம் உ.

3-465—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கல்முனை உபபிரிவு

அம்பாரை மாவட்டத்தில் கரவாகு வயல்களுக்கு வடிகால் வசதிகள் செய்வதற்காகிய கேள்விப்பத்திரங்கள், மட்டக்களப்பிலுள்ள ஒழுக்குப் பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரால் 28.3.69 ம் திகதி மு. ப. 10.00 மணி வரையும் நீர்ப்பாசனத்திணைக்களத்தில் ரூபா 25,000/க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்தும் ஐக்கிய கிராமாபிவிருத்திச் சங்கங்களிலிருந்தும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்களை கல்முனை, அம்பாரை, செங்கலடியிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 24.3.69 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன், தாம் தற்போது மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கும் கல்முனை அம்பாரை, செங்கலடி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில்செலுத்திய பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

3. இக்கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை கல்முனை நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சண்முகராசா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கல்முனை– உபபிரிவு.

கல்முனை.

3-467—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### புத்தளம் உபபிரிவு

21.2.69 ந் திகதி அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரித்த "கருக்குமடுவா" பாதைக்கான கேள்வி விளம்பரம் இத்தால் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

க. மு. சுப்பிரமணியன்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
புத்தளம் உபபிரிவு.

3-540—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## நீர்ப்பாசன இலாகா

### பொலநறுவை உப பிரிவு

ஓவசியர்களுக்கான நிரந்தர விடுதிகள் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் வட கிழப்பாக பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரால் 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசன இலாகாவில் ரூ. 25,000/க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், ஏனைய சங்கங்களுமே, இவ்வேலைக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பொதுச் சங்கங்கள் எவ்வித கேள்விக் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. இக்கேள்விப்பத்திரங்கள் பொலநறுவை, கவுடுல்லை, மின்னேரிய ஆகிய உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர்களின் காரியாலயங்களில், அலுவலக நேரங்களில் 1.4.69 க்கு முன் பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விக்காரர்களாக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன், தாம் தற்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும், இவ்வேலைகளுக்கு பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரிடமிருந்து வேலையின் முன்னேற்றம் பற்றிய கடிதமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும். இப்பத்திரங்களைப் பெற்றதும், நீர்ப்பாசன பொறியியலாளர் கேள்விப்பத்திரங்களை கொடுக்கலாமா இல்லையா என்பதை பரிசீலனை செய்வார்.

3. கேள்விக் கட்டணமாகிய இருபத்தைந்து ரூபாயை நீர்ப்பாசன அத்தியட்சர் பெயரில் எடுக்கப்பட்ட ஓர் காசுக்கட்டளையை நீர்ப்பாசன பொறியியலாளருக்கு கொடுத்தோ அல்லது கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரி ஒன்றில் இப்பணத்தைக் கட்டிய பற்றுச்சீட்டை நீர்ப்பாசன பொறியியலாளரிடம் கொடுத்தோ கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. இக் கேள்விக்காகிய மேலதிக விபரங்களை பொலநறுவை உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
பொலநறுவை உப பிரிவு.

நீர்ப்பாசன காரியாலயம்,
பொலநறுவை,
5.3.1969.

3-468—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## பொதுவேலைத் திணைக்களம்

திருகோணமலை மாவட்டத்தில் 1969 ம் ஆண்டில் ஏ. பிரிவில் உள்ள அரசாங்க கட்டிட வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம் பொதுவேலைத் திணைக்கள வட மத்திய பகுதி கண்காணிப்பு பொறியியலாளர் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 10 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள திருகோணமலை மாவட்டப் பிரதம நிர்மாண/நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைபடிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறியியலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 56,000/ க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100/ செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ம் தேதி வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறியியலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/ வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறியியலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதி காண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறியியலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்,

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுத்துரை,
கண்காணிப்பு பொறியியலாளர்,
வட மத்திய பகுதி.

கண்காணிப்பு பொறியியலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம்,
அனுராதபுரம்.
1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந வ.

3–383—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—மன்னார் உபபகுதி

மன்னார் உபபிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடமாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின் உடனே திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
| --- | --- | --- |
| அகத்திவாயக்காலில் மேலதிக மடை (சலுசு) ஒன்று கட்டுதல் .. ... | 28,000 .. | 50 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, வவுனிக்குளம் ஆகிய நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 24.3.69 பிற்பகல் 3 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வேற்றுப்பத்திரங்கள் வழங்கு முன் கேள்விக் கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் அல்லது ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்களை மன்னார் நீர்ப்பாசன உப பிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

க. சிவசுப்பிரமணியம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மன்னார் உப–பகுதி.

முருங்கன்,
1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந வ.

3–397—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

---

## *கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு*
### *சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்-1968/69*

*சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.*

*3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1969 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 7 ஆந் திகதி பி.ப. 4.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.*

*4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்-1968/69" என அடையாளமிடப்பட வேண்டும்.*

*5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.*

*6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100/- கட்டி, அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.*

*7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.*

*டபிள்யு. கன்னங்கரா,*
*கணக்காளர், விநியோகம்,*
*நிரந்தரக் காரியதரிசிக்காக,*
*கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.*

*கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,*
*மலாய் வீதி, கொழும்பு 2,*
*6 மார்ச், 1969.*

3–590—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

## ஹினிதும வாடிவீட்டுக்கு நீர் விநியோகத்திட்டமொன்றமைத்தல்

காலி மாவட்டம், ஹினிதும்பத்துவில் ஹினிதும வாடி வீட்டுக்கு நீர் விநியோகத் திட்டமொன்றமைப்பதற்கான கேள்விப் பத்திரம்.

1. 1969 3. 31. ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை காலி மாவட்ட அரசாங்க அதிபரினல் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. திரும்பிக் கொடுக்கக்கூடிய ரூபா 100 ஐ காலிக் கச்சேரியில் வைப்புப் பணமாகச் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டை இக் கச்சேரி நிர்வாகக் கிளையில் சமர்ப்பித்து 1969. 3. 29 ஆந் திகதிவரையில் அதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. ரூபா 25,000/ க்குக் குறையாத பெறுமானமுடையவரெனப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களும் இவ்வித வேலைகளில் அனுபவமுள்ளவர்களென்பதற்கு அத்தாட்சிகள் சமர்ப்பிக்கக் கூடியவர்களும் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் தனிப்பட்டோர் ஆகியவர்கள் இதற்காகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். கூட்டுறவுச் சங்கங்களும் கிராமாபிவிருத்திச் சங்கங்களும் அதன் பிர்தானிகளிடமிருந்து தங்கள் தகைமைகளைப்பற்றி அத்தாட்சியாகப் பெற்றுக்கொண்ட கடிதங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்கள் வைப்புப் பணம் வைத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.

4. இணைப்பிரதிகளுடனுன கேள்விப் பத்திரங்களை முத்திரையிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஹினிதும வாடி வீட்டுக்கு நீர் விநியோகத் திட்டமொன்றமைப்பதற்கான கேள்விப் பத்திரம்" எனத் தெளிவாக எழுதி பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு வருவோர் கச்சேரிக் காரியாலய உதவியாளரின் அறையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். தபால் மூலம் அனுப்புவோர் கேள்விப் பத்திரம் ஏற்றுக்ககொள்ளும் முடிவு திகதியன்று குறித்த நேரம் முடிவதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

5. 1969. 3. 31 ஆந் திகதி பிற்பகல் 3. 00 மணிவரை கிடைத்துள்ள கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் அதனைச் சமர்ப்பித்தோர் அங்கு சமுகமாயிருக்கலாம். கேள்விப் பத்திரம் சம்பந்தமாக எழும் சர்ச்சைகளையிட்டு அரசாங்க அதிபரின் தீர்ப்பே இறுதியும் முடிவுமானதுமாகும்.

6. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை சிறுபாதைகள் சம்பந்தமாகக் , கடமையாற்றும் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி, காலி,
1969.

அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

3-523—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### 2 சேற்றுப்பம்பிகள் (ஸ்லட்ஜ்) வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

1969 2. 21 ந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் மேற்படி தலைப்பின் கீழ் காணப்படும் 1969 2. 14 ந் திகதிய விளம்பரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

6 மார்ச் 1969.

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மணிக்கு 5000 கலன்கள் வீதம் இறைக்கக்கூடிய 2 சேற்றுப் பம்பிகள் (ஸ்லட்ஜ்) வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய கேள்விப்பத்திரங்களை 1969 4. 18 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பு/உள்வரும் கப்பற் சரக்கு (ஆ) இறக்குமதி செய்து கிருலப்பனை மத்திய வேலைத் தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் மூந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்க் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன்மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காக குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "சேற்றுப் (ஸ்லட்ஜ) கம்பிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திர பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கோள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969. 4. 18 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969. 3. 6.

3-544—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## பொதுவேலைத் திணைக்களம்

பலாகல பகுதியில் காரியாதிகாரி காரியாலயமும் காரியாதிகாரி இல்லமும் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் வடமத்திய மாகாணம் பொது வேலைப் பகுதியின் கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஏப்பரல் மாதம் 10 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள மாதன்கடவலை மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரங்களில், இணைபடிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 81,000 க்குக் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

காண்காணிப்பு பொறிவலாளர்,
வட மத்திய மாகாணம்.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம். அனுராதபுரம்,
1969.3.1

3-384—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## பொதுவேலைத் திணைக்களம்

திருகோணமலை மாவட்டத்தில் 1969 ம் ஆண்டில் "பீ" பிரிவில் உள்ள அரசாங்க சட்டிட வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம் பொது வேலைத்திணைக்கள வட மத்திய பகுதி கண்காணிப்பு பொறியியலாளர் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 10 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள, திருகோணமலை மாவட்டப்பிரதம நிர்மாண, நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்காப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 30,000 க்குக் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 50 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் மார்ச்சு மாதம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத் திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியதவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பெர்னுந்து,
கண்காணிப்பு பொணிவலாளர்,
வட மத்திய பகுதி.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம், அனுராதபுரம்,
1969.3.1

3—382—14.3.69 ந் திகதிய வர்தமானி இல. 14,845

---

இல. சீடீ/13/68

## கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகளில் சமையல் அறைக்கழிவுப் பொருள் விற்பனை

கீழ்த்தந்த அட்டவணையிலுள்ள வைத்தியசாலைகளில் 1.4.69 தொடக்கம் 30.9.69 வரை சமையல் அறைக் கழிவுப்பொருள் விற்பனைக்கு தனித்தனி கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிலிருந்து கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள் அதிபர் 1969 மார்ச்சு மாதம் 28 ந் திகதி முற்பகல் 10.30 வரை ஏற்றுக்கொள்வார்.

(2) ஒவ்வொரு வைத்தியசாலை (பகுதி) க்கும் மாச விகிதம் குறிப்பிட்ட வெவ்வேறு கேள்விகள் இவ்விரு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சமையல் அறைக் கழிவுப்பொருள் விற்பனை" என எழுதப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு கேள்விகளைக் கொண்ட உறை என் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறைகள் 1969 ம் ஆண்டு மார்ச்சு மாசம் 28 ந் திகதி முற்பகல் 10.30 ற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக இந்தக்காரியாலயத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் போடப்படலாம். அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம்.

(3) கேள்விகள் யாவும் 1969 ம் ஆண்டு மார்ச்சு மாசம் 28 ந் தேதி முற்பகல் 10.30 ற்கு இக்காரியாலயத்தில் திறக்கப்படும்.

(4) கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் சமூகமாய் இருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக் காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

(5) தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர் அட்டவணையில் குறிப்பிட்ட விகிதம் பிணைப்பணத்தை கட்டி அச்சேவை சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடவேண்டும். சேவை சரியாகச் செய்து முடிந்ததும் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

(6) ஒவ்வொரு மாசமும் கந்தோர் திறந்திருக்கும் முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கழிவுப்பொருளுக்கான பணம் கட்டப்பட வேண்டும்.

(7) கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் கழிவுப்பொருள் பின்வருமாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(i) சமையல் அறையில் கழிவுப்பொருள் ;

(ii) பெரியாஸ்பத்திரியில் எல்லா வாட்டுக்களினும் கழிவுப்பொருளும் எஞ்சிய உணவுப்பொருளும் ;

(iii) கொழும்பு மருத்துவத் தாதிமார் பயிற்சிச்சாலையில் சமையல் அறைக் கழிவுப்பொருள்.

(8) மேலும் விபரங்கள் தேவைப்படின் இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அ. நாகேந்திரன்,
அதிபர்,
கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்.

கொ. தொ. வை. காரியாலயம்,
இன்சி ரோட்டு,
கொழும்பு 8,
1969 ம் ஆடு பெப்பிரவரி மீ 19 ந் உ.

அட்டவணை

| நிலையம் | பிணைவைப்புப் பணம் ரூபா |
|---|---|
| 1. காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை .. .. | 50 |
| 2. டி சொயிசா பெண்கள் வைத்தியசாலை .. .. | 50 |
| 3. றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை .. | 50 |
| 4. கண் வைத்தியசாலை .. .. .. | 50 |
| 5. பெரியாஸ்பத்திரி— | |
| (i) சமையல் அறைக் கழிவுப்பொருள் .. | 100 |
| (ii) பெரியாஸ்பத்திரியில் எல்லா வாட்டுக்களிலும் கழிவுப் பொருளும் எஞ்சிய உணவுப் பொருளும் .. | 100 |
| (iii) கொழும்பு மருத்துவத் தாதிமார் பயிற்சிச்சாலையில் சமையல் அறைக் கழிவுப்பொருள் .. | 50 |

3-331—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை

### போசனசாலை காலித்துறைமுகம்

மேற்படி தேனீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். இக் குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகார சபையில் ரூபா 25/- கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

3-575—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

## சிலாப–புத்தளம் பெரும்பிரிவு

### சிறுநீர்ப்பாசன வேலை சம்பந்தமாக விண்ணப்பம் கோரும் டெண்டர் பத்திரம்

கீழ்க்குறிப்பிடும் சிறு நீர்ப்பாசன வேலைகள் சம்பந்தமாக 1969 மார்ச் 28 ந் திகதி பகல் 12 மணிவரை சிலாப விவசாய உதவி கொமிஷனர் அவர்களால் டெண்டர் பத்திரம் அழைக்கப்படும்.

(1) குடாவெவ குளம் புதுப்பித்தல்.
(2) மினீவெவ புதுப்பித்தல்.
(3) கந்தரவெவ புதுப்பித்தல்
(4) பஹலகலவெவ புதுப்பித்தல்.
(5) தில்லவெல னுணுவிலஅல புதுப்பித்தல்.
(6) ஹல்மில்லாவவெவ புதுப்பித்தல்.
(7) கோனவில போலவத்த அல புதுப்பித்தல்.
(8) கும்புக்வெவ குளம் புதுப்பித்தல்.
(9) வட்டக்கண்டல்குளம் புதுப்பித்தல்.
(10) பேத்துக்குளமகுளம் புதுப்பித்தல்.
(11) சின்னக்குளம குளம் புதுப்பித்தல்.
(12) தன்கஹவெவ புதுப்பித்தல்.
(13) வீஹேன்யாய கட்டு புதுப்பித்தல்.

மேலதிக விவரம் சம்பந்தமாக இக்கசற்றின் சிங்களப் பிரிவைப் பார்க்கவும்.

டபிள்யூ. பி. ஈ. எல். எப். குணசேகர,
உதவிக்கமிஷனர், விவசாயப்பகுதி,
சிலாபம்.

விவசாயப்பகுதி காரியாலயம்,
சிலாபம்,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 4 ந் உ.

3-474—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

---

## கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் பகுதி—திருகோணமலை

திருகோணமலை கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரால் கீழ்க் காணும் சிறிய நீர்ப்பாசன வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் அரசாங்கத்திற் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்து 31.3.1969 பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அவை மறுநாள் காலை 9.30 மணியளவில் திறக்கப்படும்.

**குச்சவெளி காரியாதிகாரியின் பகுதி—**

| குளத்தின் பெயர் | வேலை விபரம் | பயிர்செய்கை குழுவின் பகுதி |
|---|---|---|
| 1. ஏதாண்டமுறிப்புக்குளம் | திருத்தம் .. | வட்டுவன் |
| 2. ஆனைவிளுந்தான்குளம் | திருத்தம் .. | தென்னமரவாடி |
| 3. குசவணுத்து .. | அணைக்கட்டுத்திருத்தம் | குசவணுத்துவெளி |
| 4. பொய்கைக்குளம் .. | துருசு கட்டுதல் .. | குசவணுத்துவெளி |
| 5. ஒட்டன்குளம் .. | திருத்தம் .. | வன்னியார்வெளி |
| 6. களிக்காட்டுக்குளம் .. | துருசு கட்டுதல் .. | ஆண்டான்குளம் |
| 7. ஆலங்கேணிக்குளம் .. | திருத்தம் .. | ஈனும்புறுக்கி |

**கொட்டியார் பற்று காரியாதிகாரியின் பகுதி—**

| | | |
|---|---|---|
| 1. வேப்பன்குளம் .. | திருத்தம் .. | கட்டபறிச்சான் |
| 2. கறடிப்பாளிக்குளம் .. | திருத்தம் .. | சம்பூர் |
| 3. கயவந்தன்குளம் .. | திருத்தம் .. | கட்டபறிச்சான் |
| 4. இலுப்பைக்குளம் .. | திருத்தம் .. | சம்பூர் |
| 5. பொம்மாண்டக்குளம் .. | துருசு கட்டுதல் .. | கருச்சி |
| 6. குறவன்வட்டுவன்குளம் | திருத்தம் .. | சேனையூர் |

**கிண்ணியாக் காரியாதிகாரியின் பகுதி—**

| | | |
|---|---|---|
| 1. மண்ணெடுத்தகுளம் .. | திருத்தம் .. | குட்டியாகுளம் |

இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்களை இவ்வலுவலகத்தில் 28.3.1969 பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பத்திரம் பெறுவதற்கு கேள்விக் கட்டணமாக ரூபா 10.00 கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச் சீட்டுக் காண்பிக்கப்படவேண்டும். இக்கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. சண்முகராசா,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்,
திருகோணமலை.

திருகோணமலை,
1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 6 ந் உ.

3-539—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845.

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## கடற்றொழில் திணைக்களம்

### தள்ளப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

*1969.3.21 ந் தேதி வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள, கடற்றொழில் திணைக்கள வளவில், மின் கேத்தில், கதிரைகள், ஒலிக்கும் மணிக்கூடுகள், ஸ்கிறீன், வடி (2 கலன்கள்) ஜீப் ரயரும், ரியூப்பும், காசுப் பெட்டிகள், மின்சுருள்கள், சன்னல் மறைப்புச் சுருள்கள், காம் பலகைகள், தூளையிடுகருவி, கூட்டுப்பொறி, நாகம்பூசிய தாங்கிகள், (400 கலன்கள் கொள்ளக்கூடியன), எயிறெட்டர் புறொக்ர், நிறைப் பெட்டி, குலைந்த விழுக் கதிரை ஆகிய தள்ளப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை நடைபெறும். இப்பொருட்களை விற்குமுன் பரிசீலனை செய்வதற்கு கொழும்பு 3 கடற்றொழில் திணைக்களக்களஞ்சியப் பொறுப்பாளருடன், அலுவலக நேரத்தில் முன்னறிவித்தலுடன் தொடர்பு கொள்ளவும்.*

*விற்பனையில் கொள்வனவு செய்தவர்கள், பணம் கட்டி, பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.*

*கடற்றொழிற் இயக்குநர்*

*கடற்றொழில் திணைக்களம்,*
*கொழும்பு 3.*

*3-461—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845*

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள பழுதடைந்ததும் அழுக்கடைந்ததுமான துணிகள், வெலோறு மொறட்டுவாவில் உள்ள எனது பண்டகசாலையில் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 15 ம் திகதி காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். முழுத் தொகையையும் ஒரு தொகையாகவே கணிக்கப்பட்டுக் கொடுக்கப்படும். தெரிவு செய்த கேள்வியாளர் அவரது கேள்வித் தொகை முழுவதையும் பணமாக உடன் செலுத்தி அவரது சொந்தச் செலவிலேயே அந்தப் பொருட்களைப் பண்டகசாலையிலிருந்து எடுத்துச் செல்லல் வேண்டும். கேள்வியாளர்கள் உதவிப் பணிப்பாளர் (கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா) வெலோறு, மொறட்டுவ அவர்களுடன் முன்னரே தொடர்பு கொண்டு அந்தத் துணிகளைப் பார்வையிட்டுக் கொள்ளலாம். தொலை பேசி இல. (மொறட்டுவா* **311**).

**பழுதடைந்த அழுக்கடைந்த துணிகளின் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | சாரங்கள் .. .. | 84,089 |
| 2. | சாரங்களும் பிஜாமா துண்டுகளும் .. | 30,601 இருத்தல் |
| 3. | சேலைகள் .. .. | 2,826 |
| 4. | நீண்ட துணிகளும் சீற்றிங்கும் .. | 14,378½ யார் |
| 5. | வெள்ளையும் நீலமும் சற்றின் டிறில் .. | 13,545½ யார் |
| 6. | வெள்ளையும் சாயமிடப்பட்டதுமான வொயில் | 17,203 யார் |
| 7. | வெள்ளைச் சேலைத்துணி .. | 3,048½ யார் |
| 8. | காக்கியும் வெள்ளை ருவில் .. | 3,994 யார் |
| 9. | பொலிஸ் காக்கி டிறில் .. .. | 3,047 யார் |
| 10. | வெள்ளையும் சாயமிடப்பட்டதுமான பப்ளின் .. | 6,317½ யார் |
| 11. | வெள்ளையும் நிறமுமான ரஞர் .. | 2,594¼ யார் |
| 12. | நிறமான கேஸ்மண்ட் .. .. | 2,189 யார் |
| 13. | பெட்வோட் சோட் .. .. | 747¾ யார் |
| 14. | வெள்ளையும் அச்சிடப்பட்டதுமான பிஜாமா .. | 574¼ யார் |
| 15. | மெல்லியதும், கடுமையானதுமான நீல டிறில் | 190 யார் |
| 16. | சால்வைகள் .. .. | 264 |
| 17. | வெள்ளை வேட்டிகள் .. .. | 2,055 |
| 18. | பட்டு சேலைகள் .. .. | 45 |
| 19. | பட்டு சேலை துணி .. .. | 28 யார் |
| 20. | ரேக்கிஸ் துவாய்கள் .. .. | 13 |
| 21. | வேட்டித் துணி .. .. | 899 யார் |
| 22. | பல்வேறுபட்ட துணிகள் .. .. | 826½ யார் |
| 23. | பல்வேறுபட்ட துணித் துண்டுகள் .. | 183¼ யார் |
| 24. | பல்வேறுபட்ட துணித்துண்டுகள் .. | 34 இருத்தல் |
| 25. | சிங்கக்கொடி .. .. | 68 |

சி. டீ. விஜயதேவேந்திரம்,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

கிராமாபிவிருத்திச் சிறு கைத்தொழில் இலாகா,
சொறின்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
பங்குனி 6, 1969.

3–599—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள் (279 ம் பக்கத் தொடர்)

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### ஆரம்ப விலைக்குறிப்பீடுகளை வரவழைத்தல்

*இலங்கையில் கடதாசிக் கைத்தொழிலை விரிவுபடுத்துவதற்கும் பல்வகைப்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்கள்*

*இதன் கீழ் 5 லிருந்து 7 வரை இலக்கமிடப்பட்டுள்ள மூன்று வேலைத் திட்டங்களுக்கு பொறித்தொகுதியும் உபகரணங்களும் வழங்குவதற்கு இலங்கை கொழும்பிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் ஆரம்ப விலைக்குறிப்பீடுகளை கோருகின்றது:—*

*வேலைத்திட்டம் 5—ஸ்ரேபோட் ஆலை*
*வேலைத்திட்டம் 6—ரிசு கடதாசி ஆலை*
*வேலைத்திட்டம் 7—கடதாசி மற்றும் கடதாசி அட்டை மேற்பூச்சிடும் பொறித்தொகுதி.*

*கிடைக்கப்பெறும் ஆரம்ப விலைக்குறிப்பீடுகள் தொழில்நுட்பம் மற்றும் நிதி நிலைகள் பற்றி ஆராயப்படும், அவை திருப்திகரமாக இருந்தால் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பெற்ற பின்பு தெரிவு செய்யப்பட்ட பட்டியலிலுள்ள கேள்விப்பத்திரகாரர்களுக்கு முழுவிபரம் அடங்கிய விபரக்கூற்றுக்கள் கொடுக்கப்படும்.*

*ஆரம்ப விலைக்குறிப்பீடுகளை ஆயத்தம் செய்வதற்கு தேவையான விபரக் கூற்றுச் சுருக்கம், பொது நியதிகள் நிபந்தனைகள் ஆகியவை அடங்கிய விஞ்ஞாபனம் கொடுக்கப்படும்.*

*இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் முதல்வர்கள் அல்லது கடதாசிக் கூழ் மற்றும் கடதாசி இயந்திரம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கூட்டிணைப்பு நிறுவனம் மற்றும் ஏனைய மின்னியல் மற்றும் பொறியியல் உபகரணங்கள் உற்பத்தி செய்பவர்கள் அல்லது அவர்களின் தத்துவம் பெற்ற முகவர்களிடமிருந்து ஆரம்ப விலைக்குறிப்பீடுகள் முதலில் கோரப்படுகின்றன.*

*எல்லா வேலைத்திட்டங்களுக்கும் அல்லது அவற்றில் ஏதாவது ஒன்றிற்கு ஆரம்ப விலைக்குறிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படலாம்.*

*எல்லா விலைக்குறிப்பீடுகளும் முப்படியில் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதியும் முறையே கையொப்பமிடப்பட்டு உறையின் இடது கை மேல் மூலையில் "வேலைத்திட்ட இல............ற்கான (விபரம்) ஆரம்பவிலைக்குறிப்பீடு" என குறிப்பிடப்பட்டு, தலைவர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்,* 135, *யூனியன் பிளேஸ், த. பெ. எண்* 1367, *கொழும்பு, இலங்கை என விலாசமிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன பொது முகாமையாளரின் காரியாலயத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.*

1969 *ம் ஆண்டு யூன் மாதம்* 30 *ந் திகதி பி. ப.* 2.00 *மணிக்குப் பிந்தாமல் சகல ஆரம்ப விலைக்குறிப்பீடுகளும் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும்.*

க. சி. தங்கராசா,
தலைவர்,
கிழக்கிலங்கை கடதாசி
ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
த. பெ. 1367,
கொழும்பு 2,
1969 பெப்புருவரி 20.

3–508—14.3.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,845

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 3.1.69 | வெள்ளி | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| பெப்புருவரி | 7.2.69 | வெள்ளி | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.2.69 | வெள்ளி | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| மாச்சு | 7.3.69 | வெள்ளி | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | 3.4.69 | வியாழன் | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| மே | 9.5.69 | வெள்ளி | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| யூன் | 6.6.69 | வெள்ளி | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.